وَلَوْ شَآءَ رَبُّكَ لَجَعَلَ النَّاسَ اُمَّةً وَّاحِدَةً وَّلَا يَزَالُوْنَ
مُخْتَلِفِيْنَ ﴿١١٨﴾ اِلَّا مَنْ رَّحِمَ رَبُّكَ ؕ وَلِذٰلِكَ خَلَقَهُمْ ؕ وَتَمَّتْ كَلِمَةُ
رَبِّكَ لَاَمْلَئَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ اَجْمَعِيْنَ ﴿١١٩﴾ وَكُلًّا
نَّقُصُّ عَلَيْكَ مِنْ اَنْۢبَآءِ الرُّسُلِ مَا نُثَبِّتُ بِهٖ فُؤَادَكَ ۚ وَجَآءَكَ
فِيْ هٰذِهِ الْحَقُّ وَمَوْعِظَةٌ وَّذِكْرٰى لِلْمُؤْمِنِيْنَ ﴿١٢٠﴾ وَقُلْ لِّلَّذِيْنَ لَا
يُؤْمِنُوْنَ اعْمَلُوْا عَلٰى مَكَانَتِكُمْ ؕ اِنَّا عٰمِلُوْنَ ﴿١٢١﴾ وَانْتَظِرُوْا ۚ اِنَّا
مُنْتَظِرُوْنَ ﴿١٢٢﴾ وَلِلّٰهِ غَيْبُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاِلَيْهِ يُرْجَعُ الْاَمْرُ
كُلُّهٗ فَاعْبُدْهُ وَتَوَكَّلْ عَلَيْهِ ؕ وَمَا رَبُّكَ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ﴿١٢٣﴾ ع ١٠

## سُوْرَةُ يُوْسُفَ مَكِّيَّةٌ وَهِيَ مِائَةٌ وَاِحْدٰى عَشْرَةَ اٰيَةً وَّاثْنَا عَشَرَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

الٓرٰ ۫ تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْمُبِيْنِ ﴿١﴾ ۫ اِنَّآ اَنْزَلْنٰهُ قُرْءٰنًا عَرَبِيًّا
لَّعَلَّكُمْ تَعْقِلُوْنَ ﴿٢﴾ نَحْنُ نَقُصُّ عَلَيْكَ اَحْسَنَ الْقَصَصِ بِمَآ
اَوْحَيْنَآ اِلَيْكَ هٰذَا الْقُرْاٰنَ ۖ وَاِنْ كُنْتَ مِنْ قَبْلِهٖ لَمِنَ
الْغٰفِلِيْنَ ﴿٣﴾ اِذْ قَالَ يُوْسُفُ لِاَبِيْهِ يٰۤاَبَتِ اِنِّيْ رَاَيْتُ اَحَدَ
عَشَرَ كَوْكَبًا وَّالشَّمْسَ وَالْقَمَرَ رَاَيْتُهُمْ لِيْ سٰجِدِيْنَ ﴿٤﴾

118. மேலும், உமதிரட்சகன் நாடியிருந்தால் (அனைத்து) மனிதர்களை ஒரே சமூகத்தினராக ஆக்கியிருப்பான்; இன்னும், அவர்கள் தங்களுக்குள் மாறுபட்டுக் கொண்டவர்களாகவே இருப்பார்கள்_

119. (அவர்களில்) உமதிரட்சகன் அருள் புரிந்தவர்களைத் தவிர, இதற்காகவே (மாறுபடும்) அவர்களைப் படைத்துமிருக்கிறான்; "(பாவம் செய்த) ஜின்கள் மற்றும் மனிதர்கள் ஆகிய அனைவராலும் நிச்சயமாக நான் நரகத்தை நிரப்புவேன்" என்ற உமதிரட்சகனின் வாக்கும் பூர்த்தியாகிவிட்டது.

120. நம் தூதர்களின் செய்திகளிலிருந்து உம் இதயத்தை எதைக்கொண்டு நாம் உறுதிப்படுத்துவோமோ, அவை ஒவ்வொன்றையும் நாம் உமக்குக் கூறினோம்; உமக்கு இவற்றில் உண்மை (யானவை)யும் விசுவாசிகளுக்கு நல்லுபதேசமும், நினைவூட்டலும் வந்துவிட்டது.

121. மேலும், விசுவாசங்கொள்ளாதவர்களுக்கு (நபியே!)நீர் கூறுவீராக: "நீங்கள் உங்கள் வழியில் (உங்கள் காரியங்களைச்) செய்து கொண்டிருங்கள்; நிச்சயமாக நாங்களும்(எங்கள் வழியில் எங்கள் காரியங்களை) செய்து கொண்டிருக்கிறோம்."

122. நீங்களும் எதிர்பார்த்துக் கொண்டிருங்கள்; நிச்சயமாக நாங்களும் (அதை) எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்."

123. வானங்களில் மற்றும், பூமியில் மறைந்திருப்பவை (யாவும்) அல்லாஹ்வுக்கே உரியன; சகல காரியமும் அவனிடமே மீட்டப்படும்; ஆதலால், அவ(ன் ஒருவ)னையே நீர் வணங்குவீராக! (சகல காரியங்களையும் ஒப்படைத்து முழுமையாக); அவன் மீதே நம்பிக்கையும் வைப்பீராக! உமதிரட்சகன், நீங்கள் செய்பவைகளைப்பற்றி பராமுகமானவனாகவுமில்லை.

---

அத்தியாயம் : 12

## யூஸுஃப்

வசனங்கள் : 111 மக்கீ ருகூஃகள் : 12

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. அலிப் லாம் றா. இவை தெளிவான (இவ்) வேதத்தின் வசனங்களாகும்.

2. நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக, இதனை அரபி (மொழி)யிலான குர்ஆனாக நிச்சயமாக நாமே இறக்கி வைத்தோம்.

3. (நபியே!) இந்தக் குர்ஆனை நாம் உமக்கு அறிவித்திருப்பதின்மூலம் மிக்க அழகான வரலாற்றை உமக்கு நாம் கூறுகிறோம்; இதற்கு முன்னர், நிச்சயமாக (இதனைப்பற்றி) அறியாதவர்களில் (ஒருவராக) நீர் இருந்தீர்.

4. யூஸுஃப் தன் தந்தையிடம், "என் தந்தையே! பதினொரு நட்சத்திரங்களையும், சூரியனையும், சந்திரனையும் நிச்சயமாக நான் (கனவில்)கண்டேன்; எனக்குச் சிரம் பணிபவையாக அவற்றை நான் கண்டேன்" என்று கூறிய சமயத்தில்,

قَالَ يٰبُنَيَّ لَا تَقْصُصْ رُءْيَاكَ عَلٰٓى اِخْوَتِكَ فَيَكِيْدُوْا لَكَ
كَيْدًا ؕ اِنَّ الشَّيْطٰنَ لِلْاِنْسَانِ عَدُوٌّ مُّبِيْنٌ ۝٥ وَكَذٰلِكَ
يَجْتَبِيْكَ رَبُّكَ وَيُعَلِّمُكَ مِنْ تَاْوِيْلِ الْاَحَادِيْثِ وَيُتِمُّ نِعْمَتَهٗ
عَلَيْكَ وَعَلٰٓى اٰلِ يَعْقُوْبَ كَمَآ اَتَمَّهَا عَلٰٓى اَبَوَيْكَ مِنْ قَبْلُ
اِبْرٰهِيْمَ وَاِسْحٰقَ ؕ اِنَّ رَبَّكَ عَلِيْمٌ حَكِيْمٌ ۝٦ لَقَدْ كَانَ فِيْ يُوْسُفَ ١ ع٢ ١١
وَاِخْوَتِهٖٓ اٰيٰتٌ لِّلسَّآئِلِيْنَ ۝٧ اِذْ قَالُوْا لَيُوْسُفُ وَاَخُوْهُ اَحَبُّ
اِلٰٓى اَبِيْنَا مِنَّا وَنَحْنُ عُصْبَةٌ ؕ اِنَّ اَبَانَا لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنِ ۝٨ ۖۚ
اِقْتُلُوْا يُوْسُفَ اَوِ اطْرَحُوْهُ اَرْضًا يَّخْلُ لَكُمْ وَجْهُ اَبِيْكُمْ وَ
تَكُوْنُوْا مِنْۢ بَعْدِهٖ قَوْمًا صٰلِحِيْنَ ۝٩ قَالَ قَآئِلٌ مِّنْهُمْ لَا تَقْتُلُوْا
يُوْسُفَ وَاَلْقُوْهُ فِيْ غَيٰبَتِ الْجُبِّ يَلْتَقِطْهُ بَعْضُ السَّيَّارَةِ
اِنْ كُنْتُمْ فٰعِلِيْنَ ۝١٠ قَالُوْا يٰٓاَبَانَا مَا لَكَ لَا تَاْمَنَّا عَلٰى يُوْسُفَ
وَاِنَّا لَهٗ لَنٰصِحُوْنَ ۝١١ اَرْسِلْهُ مَعَنَا غَدًا يَّرْتَعْ وَيَلْعَبْ وَاِنَّا
لَهٗ لَحٰفِظُوْنَ ۝١٢ قَالَ اِنِّيْ لَيَحْزُنُنِيْٓ اَنْ تَذْهَبُوْا بِهٖ وَاَخَافُ
اَنْ يَّاْكُلَهُ الذِّئْبُ وَاَنْتُمْ عَنْهُ غٰفِلُوْنَ ۝١٣ قَالُوْا لَئِنْ
اَكَلَهُ الذِّئْبُ وَنَحْنُ عُصْبَةٌ اِنَّآ اِذًا لَّخٰسِرُوْنَ ۝١٤

5. "என் அருமை மகனே! நீர் கண்ட கனவை உம் சகோதரர்களிடம் சொல்லிக்காட்ட வேண்டாம்;(அவ்வாறு செய்தால்) அவர்கள் உமக்கு யாதேனும் தீங்கிழைக்கச் சதி செய்வார்கள்;(ஏனெனில்) நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்கு பகிரங்கமான விரோதியாக இருக்கிறான்" என்று (யஃகூப் நபியாகிய )அவர் கூறினார்.

6. மேலும், "(நீர் கனவில் கண்ட) அவ்வாறே உமதிரட்சகன் உம்மைத் தேர்ந்தெடுத்து, கனவுகளின் விளக்கங்களையும் உமக்குக் கற்றுக் கொடுத்து, இதற்கு முன்னர் இப்றாஹீம், இஸ்ஹாக் ஆகிய உம்முடைய இரு மூதாதையர் மீதும் (தம் அருளாகிய) அதனைப் பூர்த்தியாக்கி வைத்தவாரே உம் மீதும், யஃகூபின் (மற்ற) குடும்பத்தினர் மீதும் அவன் தன் அருளைப் பூர்த்தியாக்கி வைப்பான்; நிச்சயமாக உமதிரட்சகன் (யாவற்றையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்"(என்றும் கூறினார்).

7. (நபியே!) நிச்சயமாக யூஸுஃபி(ன் சரித்திரத்தி)லும்,அவரது சகோதரர்களி(ன் சரித்திரத்தி)லும் வினவுகின்றவர்களுக்கு பல படிப்பினைகள் இருக்கின்றன.

8. "நாம்(பலசாலிகளான) ஒரு கூட்டமாக இருந்தும், நிச்சயமாக யூஸுஃபும், அவருடைய சகோதரரும் நம் தந்தைக்கு நம்மைவிட அதிகப் பிரியமுள்ளவர்களாயிருக்கின்றனர்; (இதில்) நிச்சயமாக நம் தந்தை பகிரங்கமான தவற்றில் இருக்கிறார்" என்று அவர்கள் கூறிய சமயத்தை (நினைவு கூர்வீராக).

9. "(ஆகவே,) யூஸுஃபைக் கொலை செய்துவிடுங்கள்; அல்லது பூமியில் எங்கேனும் எறிந்து விடுங்கள்; உங்கள் தந்தையின் முகம் (கவனம்) முற்றிலும் உங்கள் பக்கமே இருக்கும்; இதன் பின்னர், நீங்கள் (அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடிக்கொண்டு) நல்லவர்களான கூட்டத்தினராகிவிடுவீர்கள்" (என்று கூறினார்கள்).

10. (அதற்கு) அவர்களில் (நற்போதனை)கூறக்கூடிய ஒருவர், "யூஸுஃபை நீங்கள் கொலை செய்யாதீர்கள்; இன்னும், நீங்கள் (அவருக்கு ஏதும் தீமை) செய்பவர்களாக இருந்தால், ஆழமான ஒரு பாழ் கிணற்றில் அவரை போட்டுவிடுங்கள்; பிரயாணிகளில் சிலர் அவரை(க்கிணற்றிலிருந்து) எடுத்துக் கொள்ளக்கூடும்" என்று கூறினார்.

11. (பின்னர் அவர்கள் தங்கள் தந்தையிடம் வந்து,) "எங்கள் தந்தையே! யூஸுஃபைப்பற்றி (அவர் விஷயத்தில்) நீங்கள் எங்களை நம்பாமலிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? நாங்களோ, நிச்சயமாக அவருக்கு நன்மையை நாடுபவர்களாக இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

12. "நாளைய தினம் அவரை எங்களுடன் அனுப்பி வையுங்கள்; அவர் (காட்டிலுள்ள கனிகளை) நன்கு புசித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும் இருப்பார். நிச்சயமாக, நாங்கள் அவரைப் பாதுகாத்துக் கொள்வோராகவும் இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

13. அ(தற்க)வர் "நீங்கள் அவரை(அழைத்து)க்கொண்டு செல்வது நிச்சயமாக என்னைக் கவலையடையச் செய்கிறது. நீங்கள் (விளையாடிக் கொண்டு) அவரைவிட்டும் பராமுகமானவர்களாகயிருக்கும் நிலையில் ஓநாய் அவரை (அடித்துத்) தின்று விடும் என்று நான் பயப்படுகிறேன்" என்று கூறினார்.

14. அ(தற்க)வர்கள், "(ஆற்றல் மிக்க )ஒரு கூட்டத்தினராக நாங்கள் இருந்தும், அவரை ஓர் ஓநாய் தின்றுவிடுமானால், நிச்சயமாக நாங்கள் அப்போது நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்" என்று கூறினர்.

فَلَمَّا ذَهَبُوْا بِهٖ وَاَجْمَعُوْٓا اَنْ يَّجْعَلُوْهُ فِيْ غَيٰبَتِ الْجُبِّ ۚ
وَاَوْحَيْنَآ اِلَيْهِ لَتُنَبِّئَنَّهُمْ بِاَمْرِهِمْ هٰذَا وَهُمْ لَا يَشْعُرُوْنَ ﴿١٥﴾
وَجَآءُوْٓ اَبَاهُمْ عِشَآءً يَّبْكُوْنَ ﴿١٦﴾ قَالُوْا يٰٓاَبَانَآ اِنَّا ذَهَبْنَا
نَسْتَبِقُ وَتَرَكْنَا يُوْسُفَ عِنْدَ مَتَاعِنَا فَاَكَلَهُ الذِّئْبُ ۚ وَمَآ
اَنْتَ بِمُؤْمِنٍ لَّنَا وَلَوْ كُنَّا صٰدِقِيْنَ ﴿١٧﴾ وَجَآءُوْ عَلٰى قَمِيْصِهٖ الثلثة
بِدَمٍ كَذِبٍ ؕ قَالَ بَلْ سَوَّلَتْ لَكُمْ اَنْفُسُكُمْ اَمْرًا ؕ فَصَبْرٌ
جَمِيْلٌ ؕ وَاللّٰهُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ ﴿١٨﴾ وَجَآءَتْ سَيَّارَةٌ
فَاَرْسَلُوْا وَارِدَهُمْ فَاَدْلٰى دَلْوَهٗ ؕ قَالَ يٰبُشْرٰى هٰذَا غُلٰمٌ ؕ
وَاَسَرُّوْهُ بِضَاعَةً ؕ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِمَا يَعْمَلُوْنَ ﴿١٩﴾ وَشَرَوْهُ
بِثَمَنٍۢ بَخْسٍ دَرَاهِمَ مَعْدُوْدَةٍ ۚ وَكَانُوْا فِيْهِ مِنَ الزّٰهِدِيْنَ ﴿٢٠﴾ ع ٢ ١٢
وَقَالَ الَّذِى اشْتَرٰىهُ مِنْ مِّصْرَ لِامْرَاَتِهٖٓ اَكْرِمِيْ مَثْوٰىهُ
عَسٰٓى اَنْ يَّنْفَعَنَآ اَوْ نَتَّخِذَهٗ وَلَدًا ؕ وَكَذٰلِكَ مَكَّنَّا لِيُوْسُفَ
فِى الْاَرْضِ ۡ وَلِنُعَلِّمَهٗ مِنْ تَاْوِيْلِ الْاَحَادِيْثِ ؕ وَاللّٰهُ غَالِبٌ
عَلٰٓى اَمْرِهٖ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿٢١﴾ وَلَمَّا بَلَغَ
اَشُدَّهٗٓ اٰتَيْنٰهُ حُكْمًا وَّعِلْمًا ؕ وَكَذٰلِكَ نَجْزِى الْمُحْسِنِيْنَ ﴿٢٢﴾

15. ஆகவே, (யூசுஃபாகிய)அவரை(அழைத்து)க்கொண்டு சென்று, அவரை ஆழமான ஒரு பாழ்கிணற்றில் ஆக்கிவிட வேண்டுமென்றே அவர்கள் ஒருமித்து முடிவு செய்த போது, "அவர்களோ (உம்மை) அறியாதவர்களாக இருக்க, அவர்களுடைய இக்காரியத்தைப் பற்றி (ஒரு காலத்தில்) நீர் அவர்களுக்கு நிச்சயமாகத்தெரிவிப்பீர்" என்று (யூசுஃபாகிய)அவருக்கு நாம் வஹீ அறிவித்தோம்.

16. மேலும், (அன்று) பொழுதடைந்த பின், அவர்கள் தங்கள் தந்தையிடம் அழுதவர்களாகவே வந்தனர்.

17. "எங்கள் தந்தையே! நிச்சயமாக நாங்கள் (ஒருவரை ஒருவர்) முந்திக் கொண்டு சென்று விட்டோம்; யூஸுஃபை எங்கள் சாமான்களிடம் நாங்கள் விட்டு விட்டோம்; அப்போது, அவரை ஓநாய் (அடித்துத்) தின்று விட்டது; நாங்கள் (எவ்வளவு) உண்மையாளர்களாக இருப்பினும் நீர் எங்களை நம்பக் கூடியவர் அல்லர்" என்று கூறினார்கள்.

18. அன்றியும்,(தங்கள் கூற்றைப் பலப்படுத்த) அவருடைய சட்டையில் (ஆட்டின்) பொய்யான இரத்தத்தை(த் தோய்த்து)க் கொண்டு வந்(து காண்பித்)தார்கள்; (இரத்தம் தோய்ந்த அச்சட்டை கிழியாதிருப்பதைக்கண்ட யாஃகூப் நபி,) "இல்லை; உங்கள் மனங்கள் ஒரு (தீய) காரியத்தை உங்களுக்கு அழகாகக் காண்பித்து விட்டன; ஆகவே, அழகான பொறுமை (யைக்கடைப் பிடிப்பது) தான் நன்று; மேலும், நீங்கள் வர்ணிக்கின்றவற்றிலிருந்து (யூஸுஃபை இரட்சிக்க)அல்லாஹ்வே உதவி தேடப் படுபவன் (அவனிடமே உதவி தேடுகிறேன்)" என்று கூறினார்.

19. (பின்னர், அக்கிணற்றின் சமீபமாக) ஒரு பிரயாணக் கூட்டமும் வந்தது; தங்களது தண்ணீர் கொண்டு வருபவரை(த் தண்ணீருக்காக) அவர்கள் அனுப்பினார்கள்; அவர் தன் வாளியை (அக் கிணற்றில்) விட்டார். (யூஸுஃப் அதில் உட்கார்ந்து கொண்டார். அதைக் கண்டு" உங்களுக்கு) ஓ நன்மாராயமே! இதோ ஓர் (அழகிய)சிறுவன்!" என்று (யூஸுஃபைச் சுட்டிக் காட்டிக்) கூறினார்; (அவரைக் கண்ணுற்ற அவர்கள், தங்கள்) வர்த்தகப் பொருளாக அவரை (ஆக்கிக் கொள்ளக் கருதி) மறைத்துக் கொண்டார்கள்; மேலும், அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிகிறவன்.

20. மேலும், அவரை அவர்கள் அற்பக் கிரயத்திற்கு_ (விரல் விட்டு) எண்ணப்படுகின்ற (சொற்ப) வெள்ளிக் காசுகளுக்கு விற்று விட்டார்கள்; மேலும், அவர்கள் அதில் பற்றற்றவர்களாக இருந்தனர்.

21. (யூசுஃபை வாங்கியவர் , அவரை எகிப்துக்குக் கொண்டு வந்து விற்றுவிட்டார்.) எகிப்தில் அவரை வாங்கியவர் தன் மனைவியிடம், "நீ அவர் தங்குமிடத்தை கண்ணியமாக வைத்துக் கொள்; அவர் நமக்குப்பயன்தரலாம்; அல்லது அவரை நாம் ( சுவீகாரப்) புத்திரனாக எடுத்துக் கொள்ளலாம்" என்று கூறினார். அவ்வாறே அந்த (எகிப்து) பூமியில் ,யூஸுஃபுக்கு நாம் இடமளித்தோம்; கனவுகளின் விளக்கங்களை அவருக்குக் கற்பிப்பதற்காகவும் (நாம் அவருக்கு இடமளித்தோம்.) அல்லாஹ், தன் காரியத்தில் (யாவரையும்) மிகைத்தவன்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ள மாட்டார்கள் .

22. இன்னும், அவர் தன் வாலிபத்தை அடைந்தபொழுது நாம் அவருக்கு சட்ட நுணுக்கத்தையும், கல்வியையும் கொடுத்தோம்; இவ்வாறே நன்மை செய்வோருக்கு நாம் கூலி தருகிறோம்.

وَرَاوَدَتْهُ الَّتِىْ هُوَ فِىْ بَيْتِهَا عَنْ نَّفْسِهٖ وَغَلَّقَتِ الْاَبْوَابَ
وَقَالَتْ هَيْتَ لَكَ ؕ قَالَ مَعَاذَ اللّٰهِ اِنَّهٗ رَبِّىْۤ اَحْسَنَ مَثْوَاىَ ؕ
اِنَّهٗ لَا يُفْلِحُ الظّٰلِمُوْنَ ﴿۲۳﴾ وَلَقَدْ هَمَّتْ بِهٖ ۚ وَهَمَّ بِهَا لَوْلَاۤ اَنْ
رَّاٰ بُرْهَانَ رَبِّهٖ ؕ كَذٰلِكَ لِنَصْرِفَ عَنْهُ السُّوْٓءَ وَالْفَحْشَآءَ ؕ
اِنَّهٗ مِنْ عِبَادِنَا الْمُخْلَصِيْنَ ﴿۲۴﴾ وَاسْتَبَقَا الْبَابَ وَقَدَّتْ
قَمِيْصَهٗ مِنْ دُبُرٍ وَّاَلْفَيَا سَيِّدَهَا لَدَا الْبَابِ ؕ قَالَتْ مَا جَزَآءُ
مَنْ اَرَادَ بِاَهْلِكَ سُوْٓءًا اِلَّاۤ اَنْ يُّسْجَنَ اَوْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۲۵﴾
قَالَ هِىَ رَاوَدَتْنِىْ عَنْ نَّفْسِىْ وَشَهِدَ شَاهِدٌ مِّنْ اَهْلِهَا ۚ
اِنْ كَانَ قَمِيْصُهٗ قُدَّ مِنْ قُبُلٍ فَصَدَقَتْ وَهُوَ مِنَ الْكٰذِبِيْنَ ﴿۲۶﴾
وَاِنْ كَانَ قَمِيْصُهٗ قُدَّ مِنْ دُبُرٍ فَكَذَبَتْ وَهُوَ مِنَ
الصّٰدِقِيْنَ ﴿۲۷﴾ فَلَمَّا رَاٰ قَمِيْصَهٗ قُدَّ مِنْ دُبُرٍ قَالَ اِنَّهٗ مِنْ
كَيْدِكُنَّ ؕ اِنَّ كَيْدَكُنَّ عَظِيْمٌ ﴿۲۸﴾ يُوْسُفُ اَعْرِضْ عَنْ هٰذَا ٚ
ع ۳ ۱۳ وَاسْتَغْفِرِىْ لِذَنْۢبِكِ ۖۚ اِنَّكِ كُنْتِ مِنَ الْخٰطِـِٕيْنَ ﴿۲۹﴾ وَقَالَ
نِسْوَةٌ فِى الْمَدِيْنَةِ امْرَاَتُ الْعَزِيْزِ تُرَاوِدُ فَتٰٮهَا عَنْ
نَّفْسِهٖ ۚ قَدْ شَغَفَهَا حُبًّا ؕ اِنَّا لَنَرٰٮهَا فِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۳۰﴾

23. மேலும், அவர் எவளுடைய வீட்டில் இருந்தாரோ, அவள் அவர் மீது காதல் கொண்டு, தன் விருப்பத்திற்கிணங்குமாறு எல்லாக் கதவுகளையும் மூடிவிட்டு அவரை "வாரும்" என்றழைத்தாள்; அ(தற்க)வர், "அல்லாஹ் (இத் தீய செயலிலிருந்து) காத்தருள்வானாகவும்! நிச்சயமாக என் எஜமானனாகிய (உன் கண)வர் என் தங்குமிடத்தை அழகாக்கி வைத்திருக்கிறார்; நிச்சயமாக, (இத்தகைய நன்மை செய்வோருக்குத் துரோகம் செய்யும்) அநியாயக்காரர்கள் வெற்றி பெறமாட்டார்கள்" என்று கூறினார்.

24. அவள் அவரை(அடைய) திடமாக ஆசைகொண்டு விட்டாள்; அவர் தன் இரட்சகனுடைய சான்றைக் கண்டிராவிடில், அவரும் அவள் மீது ஆசை கொண்டே இருப்பார்; தீமையையும், மானக்கேடான செயல்களையும் அவரைவிட்டும் நாம் திருப்பிவிடுவதற்காக (அவருக்கு) இவ்வாறு (எச்சரிக்கை செய்தோம்.) நிச்சயமாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் அடியார்களில் உள்ளவராவார்.

25. (யூசுஃப் அவளை விட்டுத் தப்பிக்க வெளியில் செல்ல ஓடினார்; அவள் அவரைப் பிடிக்க இவ்வாறாக) இருவரும், ஒருவரை ஒருவர் முந்திக் கொள்ள வாசல் பக்கம் ஓடினார்கள்;(யூசுஃப் முந்திக் கொள்ளவே, அவருடைய சட்டையை அவள் பிடித்திழுத்தாள்.) ஆகவே, அவருடைய சட்டையைப் பின்புறமாக அவள் கிழித்துவிட்டாள்; (அச்சமயம்) வாசலில் அவளுடைய கணவரை இருவரும் (காணப்)பெற்றனர்; (ஆகவே, அவள் தான் தப்பிக்க அவரிடம்,) "உம்முடைய மனைவிக்குத் தீங்கை நாடியவனுக்கு அவன் சிறையிலிடப்படுவதையோ அல்லது துன்புறுத்தும் வேதனையையோ தவிர (வேறு) என்ன தண்டனை (இருக்கக்கூடும்)?" என்று கூறினாள்.

26. (யூஸுஃப் அதனை மறுத்து,) "அவள்தான் தன் விருப்பத்திற்கிணங்குமாறு என்னை அழைத்தாள்" என்று கூறினார்; (அது சமயம்) அவளுடைய குடும்பத்திலிருந்தசாட்சியாளர் ஒருவர் (பின் வருமாறு) சாட்சி கூறினார்: "அவருடைய சட்டை முன்புறமாகக் கிழிக்கப்பட்டிருந்தால், அவள் உண்மை சொல்கிறாள்; அவரோ பொய்யர்களில் உள்ளவராவார்.

27. அன்றியும், அவருடைய சட்டை பின்புறமாக் கிழிக்கப்பட்டிருந்தால், அவள் பொய் சொல்கிறாள்; அவர் உண்மையாளர்களில் உள்ளவராவார்" (என்றார்).

28. ஆகவே, (யூஸுஃபாகிய) அவருடைய சட்டையை _ அது பின்புறமாகக் கிழிக்கப்பட்டிருப்பதை அவர் பார்த்தபோது (தன் மனைவியிடம்,) "நிச்சயமாக இது (பெண்களாகிய) உங்களுடைய சதியிலுள்ளதே; நிச்சயமாக உங்களின் சதி மகத்தானது" என்று கூறினார்.

29. (யூஸுஃபிடம்,) "யூஸுஃபே! நீர் இதனை விட்டும் புறக்கணித்து விடும் (என்று கூறி மீண்டும் அவளிடம்,) நீ உன் பாவத்திற்கு மன்னிப்புத் தேடிக்கொள்; நிச்சயமாக நீ தவறு செய்தவர்களில் இருக்கிறாய்" என்று (அவளது கணவராகிய) அவர் கூறினார்.

30. அப்பட்டணத்திலுள்ள பெண்கள் பலரும் "(எகிப்திய அரசின்) அமைச்சருடைய மனைவி தன்னுடைய (அடிமை) வாலிபனை தன் விருப்பத்திற் கிணங்குமாறு அழைக்கிறாள்; காதலால் அவர் அவளை மிகைத்து விட்டார்; நிச்சயமாக, அவளை பகிரங்கமான வழி கேட்டிலேயே நாம் காண்கின்றோம்" என்று(இழிவாகக்) கூறினர்.

فَلَمَّا سَمِعَتْ بِمَكْرِهِنَّ اَرْسَلَتْ اِلَيْهِنَّ وَاَعْتَدَتْ لَهُنَّ مُتَّكَاً
وَّاٰتَتْ كُلَّ وَاحِدَةٍ مِّنْهُنَّ سِكِّيْنًا وَّقَالَتِ اخْرُجْ عَلَيْهِنَّ ۚ فَلَمَّا
رَاَيْنَهٗۤ اَكْبَرْنَهٗ وَقَطَّعْنَ اَيْدِيَهُنَّ وَقُلْنَ حَاشَ لِلّٰهِ مَا هٰذَا بَشَرًا ؕ
اِنْ هٰذَاۤ اِلَّا مَلَكٌ كَرِيْمٌ ﴿٣١﴾ قَالَتْ فَذٰلِكُنَّ الَّذِيْ لُمْتُنَّنِيْ فِيْهِ ؕ وَ
لَقَدْ رَاوَدْتُّهٗ عَنْ نَّفْسِهٖ فَاسْتَعْصَمَ ؕ وَلَئِنْ لَّمْ يَفْعَلْ مَاۤ اٰمُرُهٗ
لَيُسْجَنَنَّ وَلَيَكُوْنًا مِّنَ الصّٰغِرِيْنَ ﴿٣٢﴾ قَالَ رَبِّ السِّجْنُ اَحَبُّ
اِلَيَّ مِمَّا يَدْعُوْنَنِيْۤ اِلَيْهِ ۚ وَاِلَّا تَصْرِفْ عَنِّيْ كَيْدَهُنَّ اَصْبُ
اِلَيْهِنَّ وَاَكُنْ مِّنَ الْجٰهِلِيْنَ ﴿٣٣﴾ فَاسْتَجَابَ لَهٗ رَبُّهٗ فَصَرَفَ عَنْهُ
كَيْدَهُنَّ ؕ اِنَّهٗ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿٣٤﴾ ثُمَّ بَدَا لَهُمْ مِّنْۢ بَعْدِ مَا رَاَوُا
الْاٰيٰتِ لَيَسْجُنُنَّهٗ حَتّٰى حِيْنٍ ﴿٣٥﴾ وَدَخَلَ مَعَهُ السِّجْنَ فَتَيٰنِ ؕ قَالَ ع ٤ ٦ ١٤
اَحَدُهُمَاۤ اِنِّيْۤ اَرٰىنِيْۤ اَعْصِرُ خَمْرًا ۚ وَقَالَ الْاٰخَرُ اِنِّيْۤ اَرٰىنِيْۤ اَحْمِلُ فَوْقَ
رَاْسِيْ خُبْزًا تَاْكُلُ الطَّيْرُ مِنْهُ ؕ نَبِّئْنَا بِتَاْوِيْلِهٖ ۚ اِنَّا نَرٰىكَ مِنَ
الْمُحْسِنِيْنَ ﴿٣٦﴾ قَالَ لَا يَاْتِيْكُمَا طَعَامٌ تُرْزَقٰنِهٖۤ اِلَّا نَبَّاْتُكُمَا
بِتَاْوِيْلِهٖ قَبْلَ اَنْ يَّاْتِيَكُمَا ؕ ذٰلِكُمَا مِمَّا عَلَّمَنِيْ رَبِّيْ ؕ اِنِّيْ تَرَكْتُ
مِلَّةَ قَوْمٍ لَّا يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَهُمْ بِالْاٰخِرَةِ هُمْ كٰفِرُوْنَ ﴿٣٧﴾

31. அவர்களின் சூழ்ச்சியை(_எகிப்திய அரசின் அமைச்சருடைய மனைவியாகிய) அவள் செவியுற்றபோது,(அழைத்து வருபவரை அப்பெண்களாகிய ) அவர்கள் பால் அனுப்பினாள்.அவர்களுக்காக ஒரு விருந்து சபையை ஏற்பாடும்செய்தாள்; அ(ங்கு வந்திருந்த)வர்களில் ஒவ்வொருத்திக்கும் (ஒரு பழமும்,) ஒரு கத்தியும் கொடுத்தாள்; இன்னும் (யூஸுஃபாகிய )அவரை (அலங்கரித்து) "அவர்கள் முன் வெளிப்படுவீராக" என்று கூறினாள்; (அப்பெண்களாகிய)அவர்கள் அவரைப் பார்த்த பொழுது (அவருடைய அழகில் மயங்கி ) அவரை மிக்க மேன்மையாகக் கண்டு, தங்கள் கை(விரல்)களை அறுத்துக் கொண்டனர்; மேலும், "அல்லாஹ் பரிசுத்தமானவன்! இவர் மனிதரல்ல; இவர் மேன்மைக்குரிய ஒரு மலக்கே தவிர (வேறு)இல்லை"என்றுகூறினார்கள்.

32. அ(தற்க)வள், "நீங்கள் எவரைப் பற்றி என்னை நிந்தித்தீர்களோ அவர் இவர்தான்; நிச்சயமாக,நான் தான் என் விருப்பத்திற்கிணங்குமாறு அவரை நான் அழைத்தேன்; எனினும், அவர்(மன உறுதியுடன் தப்பித்து)விலகிக் கொண்டார்; இனியும் நான் கட்டளையிடுகிறபடி அவர் செய்யாவிடில், நிச்சயமாக அவர் சிறையிலிடப்படுவார்; மேலும் அவர் சிறுமைப்பட்டவர்களில் உள்ளவராக நிச்சயமாக ஆகிவிடுவார்," என்று கூறினாள்.

33. அ(தற்க)வர், "என் இரட்சகனே! அவர்கள் என்னை எதன்பக்கம் அழைக்கிறார்களோ அ(த் தீய காரியத்)தை விட சிறைக்கூடமே எனக்கு மிக விருப்பமானதாகும்; ஆகவே, (இப்பெண்களாகிய) அவர்களுடைய சூழ்ச்சி யிலிருந்து நீ என்னைத் திருப்பாவிட்டால்,அவர்களின் பக்கம் சாய்ந்து விடுவேன்; மேலும்(பாவம் செய்யும்) அறிவீனர்களில் ஒருவனாக நான் ஆகிவிடுவேன்" என்று (பிரார்த்தித்துக்) கூறினார்.

34. எனவே அவரது பிரார்த்தனையை அவருடைய இரட்சகன் அங்கீகரித்தான்; பின்னர், (அப்பெண்களாகிய) அவர்களின் சூழ்ச்சியை அவரை விட்டும் திருப்பிவிட்டான்; நிச்சயமாக, அவனே செவியுறுகிறவன்; யாவையும் நன்கறிகிறவன்.

35. பின்னர், (யூஸுஃப் தூயவர் என்பதற்குரிய ) அத்தாட்சிகளை அவர்கள் கண்டதன் பிறகு,சிறிது காலம்வரை (யூஸுஃபாகிய) அவரை, அவர்கள் நிச்சயமாக சிறையிலிடுவார்கள் என அவர்களுக்குத் தோன்றியது (ஆகவே, அவரைச் சிறையிலிட்டனர்).

36. மேலும் (மற்ற குற்றங்களுக்காக வேறு ) இரு வாலிபர்கள் அவருடன் சிறையில் நுழைந்தனர்; அவ்விருவரில் ஒருவன், "நான் (திராட்சையைப்பிழிந்து) மதுரஸம் தயார் செய்துகொண்டிருப்பதாக நிச்சயமாக என்னை நான் (கனவில்) கண்டேன் "என்று கூறினான்; மற்றவன், " என் தலையின் மீது ரொட்டியை சுமந்து கொண்டிருக்க அதிலிருந்து பட்சிகள் (கொத்திப்) புசிப்பதாக நிச்சயமாக என்னை நான் (கனவில்) கண்டேன்," என்று கூறி, "இவற்றின் விளக்கத்தை எங்களுக்கு நீர் தெரிவிப்பீராக! நிச்சயமாக நாங்கள் உம்மை மிக்க (ஞானமுடைய) நல்லவர்களில் (ஒருவராகக்) காண்கிறோம்" ( என்று யூஸுஃபிடம் கூறினார்கள் ).

37. (அதற்கு யூஸுஃப்,) நீங்களிருவரும் எதை உணவாக வழங்கப் படுகிறீர்களோ அது உங்களிருவருக்கும் வந்து சேரும் முன் அதன் விளக்கத்தை உங்களிருவருக்கும் நான் அறிவித்தே அல்லாது (அந்த)உணவு உங்களிருவருக்கும் வருவதில்லை; இவ்விரண்டு(க்குரிய விளக்கமு)ம் என் இரட்சகன் எனக்குக்கற்றுக் கொடுத்தவற்றில் உள்ளவையாகும்; அல்லாஹ்வை விசுவாசிக்காத சமூகத்தாரின் மார்க்கத்தை நிச்சயமாக நான் விட்டு விட்டேன்; இன்னும், அவர்கள்_ அவர்களே மறுமையை நிராகரிக்கக் கூடியவர்கள்.

وَاتَّبَعْتُ مِلَّةَ اٰبَآءِیْۤ اِبْرٰهِیْمَ وَاِسْحٰقَ وَیَعْقُوْبَ ؕ مَا كَانَ
لَنَاۤ اَنْ نُّشْرِكَ بِاللّٰهِ مِنْ شَیْءٍ ؕ ذٰلِكَ مِنْ فَضْلِ اللّٰهِ عَلَیْنَا
وَعَلَى النَّاسِ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا یَشْكُرُوْنَ ﴿۳۸﴾ یٰصَاحِبَیِ
السِّجْنِ ءَاَرْبَابٌ مُّتَفَرِّقُوْنَ خَیْرٌ اَمِ اللّٰهُ الْوَاحِدُ الْقَهَّارُ ؕ ﴿۳۹﴾
مَا تَعْبُدُوْنَ مِنْ دُوْنِهٖۤ اِلَّاۤ اَسْمَآءً سَمَّیْتُمُوْهَاۤ اَنْتُمْ وَ
اٰبَآؤُكُمْ مَّاۤ اَنْزَلَ اللّٰهُ بِهَا مِنْ سُلْطٰنٍ ؕ اِنِ الْحُكْمُ اِلَّا لِلّٰهِ ؕ
اَمَرَ اَلَّا تَعْبُدُوْۤا اِلَّاۤ اِیَّاهُ ؕ ذٰلِكَ الدِّیْنُ الْقَیِّمُ وَلٰكِنَّ اَكْثَرَ
النَّاسِ لَا یَعْلَمُوْنَ ﴿۴۰﴾ یٰصَاحِبَیِ السِّجْنِ اَمَّاۤ اَحَدُكُمَا
فَیَسْقِیْ رَبَّهٗ خَمْرًا ۚ وَاَمَّا الْاٰخَرُ فَیُصْلَبُ فَتَاْكُلُ الطَّیْرُ
مِنْ رَّاْسِهٖ ؕ قُضِیَ الْاَمْرُ الَّذِیْ فِیْهِ تَسْتَفْتِیٰنِ ؕ ﴿۴۱﴾ وَقَالَ
لِلَّذِیْ ظَنَّ اَنَّهٗ نَاجٍ مِّنْهُمَا اذْكُرْنِیْ عِنْدَ رَبِّكَ ؗ فَاَنْسٰىهُ
الشَّیْطٰنُ ذِكْرَ رَبِّهٖ فَلَبِثَ فِی السِّجْنِ بِضْعَ سِنِیْنَ ﴿۴۲﴾ ع ٥ ١٥
وَقَالَ الْمَلِكُ اِنِّیْۤ اَرٰی سَبْعَ بَقَرٰتٍ سِمَانٍ یَّاْكُلُهُنَّ
سَبْعٌ عِجَافٌ وَّسَبْعَ سُنْۢبُلٰتٍ خُضْرٍ وَّاُخَرَ یٰبِسٰتٍ ؕ یٰۤاَیُّهَا
الْمَلَاُ اَفْتُوْنِیْ فِیْ رُءْیَایَ اِنْ كُنْتُمْ لِلرُّءْیَا تَعْبُرُوْنَ ﴿۴۳﴾

38. அன்றியும், என்னுடைய மூதாதையர்களான இப்றாஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோரின் மார்க்கத்தையே நான் பின்பற்றிவிட்டேன்; (ஆதலால்,) அல்லாஹ்வுக்கு எப்பொருளையும் நாங்கள் இணையாக்குவது எங்களுக்குத் தகுமானதல்ல; இ(க் கொள்கை மீது இருப்ப)து, எங்கள் மீதும், (மற்ற) மனிதர்கள் மீதும் அல்லாஹ் புரிந்த பேரருளாகும்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர், (அல்லாஹ்வின் அருளுக்கு) நன்றி செலுத்த மாட்டார்கள்.

39. சிறைச்சாலையின் என்னிரு தோழர்களே! (யாதொரு சக்தியுமற்ற) பல்வேறு தெய்வங்கள் மேலா? அல்லது (யாவற்றையும்) அடக்கி ஆளுகின்ற ஒருவனான அல்லாஹ்வா?

40. அவனையன்றி நீங்கள் வணங்குபவை வெறும் (கற்பனைப்) பெயர்களைத் தவிர (வேறொன்றும்) இல்லை; நீங்களும் உங்கள் மூதாதையர்களும் அவற்றைப் பெயர்களாக வைத்துக்கொண்டீர்கள்; அல்லாஹ் இதற்கு யாதோர் ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை; அல்லாஹ் ஒருவனுக்கேயன்றி (மற்றெவருக்கும்) அதிகாரம் இல்லை; அவனைத் தவிர (மற்றெவரையும்) நீங்கள் வணங்கக் கூடாதென்று அவனே கட்டளையிட்டிருக்கின்றான்; இதுதான் நிலையான மார்க்கமாகும்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ளமாட்டார்கள் (என்று யூஸுஃப் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்த பின்);

41. (அவர்களிடம்,) "சிறைச்சாலையின் என்னிரு தோழர்களே! (உங்கள் கனவுகளின் விளக்கம்:) உங்களில் ஒருவன் (முன் போலவே) தன் எஜமானனுக்கு மது ரஸம் புகட்டிக்கொண்டிருப்பான்; மற்றொருவனோ சிலுவையில் அறையப்பட்டு, அவன் தலையிலிருந்து பட்சிகள் (கொத்தித்) தின்னும்; எதில் நீங்கள் இருவரும் விளக்கம் தேடினீர்களோ அக்காரியம் விதிக்கப்பட்டு விட்டது (அவ்வாறு நடந்தே தீரும்)" என்று கூறினார்.

42. அவ்விருவரில் எவர் நிச்சயமாக விடுதலை பெறுவார் என அவர் எண்ணினாரோ அத்தகையவரிடம், "நீ உன் எஜமானனிடம் என்னைப்பற்றிக் கூறுவாயாக!" என்று (யூஸுஃபாகிய) அவர் கூறினார்; ஆனால் (சிறைக் கூடத்திலிருந்து வெளியேறிய) அவர் தன் எஜமானனிடம் கூற இருந்த (எண்ணத்)தை ஷைத்தான் அவருக்கு மறக்கடித்துவிட்டான்; ஆதலால் அவர் சிறைக் கூடத்தில் (பின்னும்) சில ஆண்டுகள் தங்கிவிட்டார்.

43. மேலும், (எகிப்தின்) அரசர், (தம் பிரதானிகளிடம்,) "கொழுத்துப் பருத்த ஏழு பசுக்கள் – அவற்றை இளைத்து வற்றிய ஏழு பசுக்கள் புசிப்பதாகவும், நன்கு விளைந்த பசுமையான ஏழு கதிர்களையும், காய்ந்த வேறு (ஏழு) கதிர்களையும் நிச்சயமாக நான் (கனவில்) கண்டேன்; என் பிரதானிகளே! நீங்கள் கனவுகளுக்கு விளக்கம் கூறக்கூடியவர்களாக இருந்தால் என்னுடைய கனவுக்கு விளக்கம் கூறுங்கள்" என்று கூறினார்.

قَالُوْۤا اَضْغَاثُ اَحْلَامٍ ۚ وَ مَا نَحْنُ بِتَاْوِيْلِ الْاَحْلَامِ بِعٰلِمِيْنَ ﴿٤٤﴾
وَقَالَ الَّذِيْ نَجَا مِنْهُمَا وَادَّكَرَ بَعْدَ اُمَّةٍ اَنَا اُنَبِّئُكُمْ بِتَاْوِيْلِهٖ
فَاَرْسِلُوْنِ ﴿٤٥﴾ يُوْسُفُ اَيُّهَا الصِّدِّيْقُ اَفْتِنَا فِيْ سَبْعِ بَقَرٰتٍ
سِمَانٍ يَّاْكُلُهُنَّ سَبْعٌ عِجَافٌ وَّسَبْعِ سُنْۢبُلٰتٍ خُضْرٍ وَّاُخَرَ
يٰبِسٰتٍ ۙ لَّعَلِّيْۤ اَرْجِعُ اِلَى النَّاسِ لَعَلَّهُمْ يَعْلَمُوْنَ ﴿٤٦﴾ قَالَ تَزْرَعُوْنَ
سَبْعَ سِنِيْنَ دَاَبًا ۚ فَمَا حَصَدْتُّمْ فَذَرُوْهُ فِيْ سُنْۢبُلِهٖۤ اِلَّا قَلِيْلًا
مِّمَّا تَاْكُلُوْنَ ﴿٤٧﴾ ثُمَّ يَاْتِيْ مِنْۢ بَعْدِ ذٰلِكَ سَبْعٌ شِدَادٌ يَّاْكُلْنَ مَا
قَدَّمْتُمْ لَهُنَّ اِلَّا قَلِيْلًا مِّمَّا تُحْصِنُوْنَ ﴿٤٨﴾ ثُمَّ يَاْتِيْ مِنْۢ بَعْدِ ذٰلِكَ
عَامٌ فِيْهِ يُغَاثُ النَّاسُ وَفِيْهِ يَعْصِرُوْنَ ﴿٤٩﴾ ع وَقَالَ الْمَلِكُ ائْتُوْنِيْ ع ٦
بِهٖ ۚ فَلَمَّا جَآءَهُ الرَّسُوْلُ قَالَ ارْجِعْ اِلٰى رَبِّكَ فَسْـَٔلْهُ مَا بَالُ
النِّسْوَةِ الّٰتِيْ قَطَّعْنَ اَيْدِيَهُنَّ ؕ اِنَّ رَبِّيْ بِكَيْدِهِنَّ عَلِيْمٌ ﴿٥٠﴾
قَالَ مَا خَطْبُكُنَّ اِذْ رَاوَدْتُّنَّ يُوْسُفَ عَنْ نَّفْسِهٖ ؕ قُلْنَ حَاشَ
لِلّٰهِ مَا عَلِمْنَا عَلَيْهِ مِنْ سُوْٓءٍ ؕ قَالَتِ امْرَاَتُ الْعَزِيْزِ الْـٰٔنَ حَصْحَصَ
الْحَقُّ ٞ اَنَا رَاوَدْتُّهٗ عَنْ نَّفْسِهٖ وَاِنَّهٗ لَمِنَ الصّٰدِقِيْنَ ﴿٥١﴾ ذٰلِكَ لِيَعْلَمَ
اَنِّيْ لَمْ اَخُنْهُ بِالْغَيْبِ وَاَنَّ اللّٰهَ لَا يَهْدِيْ كَيْدَ الْخَآئِنِيْنَ ﴿٥٢﴾

44. அ(தற்க)வர்கள், "இது பொய்க் கனவுகளாகும்; (இத்தகைய) பொய்க் கனவுகளுக்கு விளக்கம்கூற நாங்கள் அறிந்தோராக இல்லை" என்று கூறினார்கள்.

45. மேலும் அவ்விருவரில், விடுதலையடைந்தவர், இன்னும் பல ஆண்டுகளுக்குப் பின்னர் (யூசுஃபை) நினைவுபடுத்திக் கொண்டவராகிய அவர், "இக்கனவின் விளக்கத்தை நான் உங்களுக்கு அறிவிப்பேன்; ஆகவே, என்னை (சிறைக்கூடத்திற்கு)அனுப்பி வையுங்கள்" என்று கூறினான்.

46. (சிறைக்கூடம் சென்று அவன்,) "யூஸுஃபே! உண்மையாளரே! கொழுத்துப் பருத்த ஏழு பசுக்களை – அவற்றை இளைத்து வற்றிய ஏழு பசுக்கள் புசிப்பதைப் பற்றியும், நன்கு விளைந்த பசுமையான ஏழு கதிர்களையும் (சாவியாகிய) காய்ந்து உலர்ந்த மற்ற (ஏழு) கதிர்களையும் (கனவில் கண்டால் அதன் பொருள் என்ன? என்பதைப்) பற்றி நீர் எங்களுக்கு அறிவிப்பீராக; என்னை (அனுப்பிய) மக்கள் (இதனைத்) தெரிந்து கொள்வதற்காக அவர்களிடம் நான் திரும்பிச் செல்ல வேண்டியதிருக்கின்றது"(என்று கேட்டார்).

47. அ(தற்க)வர், "தொடர்ந்து வழக்கப்படி (நல்ல விதமாக) ஏழு ஆண்டுகள் நீங்கள் விவசாயம் செய்வீர்கள்; நீங்கள் அறுவடை செய்வதை – நீங்கள் உண்பதற்கு வேண்டிய ஒருசொற்ப அளவைத் தவிர – (மற்ற யாவற்றையும்) அதன் கதிர்களிலேயே விட்டு வையுங்கள் என்று கூறினார்.

48. "பின்னர், அதற்கப்பால், கடினமான (பஞ்சத்தைக் கொண்ட) ஏழு (ஆண்டுகள்) வரும். நீங்கள் சேமித்து வைத்திருப்பவற்றிலிருந்து, (பஞ்சமான வருடங்களாகிய)அவைகளுக்காக நீங்கள் (கதிர்களில்)முற்படுத்திவைத்தவற்றில் குறைவானவற்றைத் தவிர (மற்றதை) அவை தின்று விடும்.

49. பின்னர், "அதற்கப்பால் ஒரு வருடம் வரும்; அதில் மனிதர்கள் ஏராளமாக மழை பொழிவிக்கப்படுவர்; (கனிவர்க்கங்களிருந்து அவற்றின் ரஸத்தைப்) பிழிந்து கொண்டுமிருப்பார்கள்"(என்றும் கூறினார்.)

50. மேலும், (கனவுகளின் விளக்கம்பற்றி அவன் கேட்டு வந்ததை அரசருக்கு அவன் அறிவிக்கவே) அதற்கு அரசர், "(இவ்விளக்கங் கூறிய) அவரை என்னிடம் கொண்டு வாருங்கள்" எனக்(கட்டளையிட்டுக்)கூறினார்; அவருடைய தூதர் யூஸுஃபிடம் (இதுபற்றிச் சொல்ல) வரவே, (அவரிடம்) "நீர் உம் எஜமானனிடம் திரும்பிச் சென்று, தங்கள் கைகளை வெட்டிக்கொண்டவர்களான பெண்களின் நிலை என்ன?" என்று அவரைக்கேளும்; நிச்சயமாக, அவர்களின் சூழ்ச்சியை என் இரட்சகன் நன்கறிந்தவன்" என்று கூறினார்.

51. (அதற்கரசர், அப்பெண்களை அழைத்து,) "நீங்கள் யூஸுஃபை (கண்டு) விரும்பியபோது உங்களுக்கு நேர்ந்ததென்ன?" என்று கேட்டார்; அ(தற்க)வர்கள், "அல்லாஹ் தூய்மையானவன்; நாங்கள் அவரிடத்தில் யாதொரு தீங்கையும் அறியவில்லை" என்று கூறிவிட்டார்கள்; (எகிப்திய அரசின்) அமைச்சருடைய மனைவி, "உண்மை இப்போது வெளிப்பட்டுவிட்டது. நான்தான் என் விருப்பத்திற்கிணங்குமாறு அவரை அழைத்தேன்; (யூஸுஃப் அழைக்கவில்லை) நிச்சயமாக, அவர் உண்மையாளர்களில் உள்ளவர்" என்று கூறினாள் –

52. இதன் காரணம்: நிச்சயமாக (என்னைவிட்டு அவரும், அவரை விட்டு நானும்) மறைவாக இருந்த சமயத்தில் அவருக்கு நான் துரோகம் செய்யவில்லை என்பதையும், நிச்சயமாக அல்லாஹ் துரோகிகளின் சூழ்ச்சிக்கு வழி காட்டமாட்டான் என்பதையும் அவர் அறிந்து கொள்வதற்காகவேதான்" (என்றும்);

وَمَآ اُبَرِّئُ نَفۡسِیۡ ۚ اِنَّ النَّفۡسَ لَاَمَّارَةٌۢ بِالسُّوۡٓءِ اِلَّا الجزء ۱۳
مَا رَحِمَ رَبِّیۡ ؕ اِنَّ رَبِّیۡ غَفُوۡرٌ رَّحِیۡمٌ ﴿۵۳﴾ وَقَالَ الۡمَلِکُ ائۡتُوۡنِیۡ
بِہٖۤ اَسۡتَخۡلِصۡہُ لِنَفۡسِیۡ ۚ فَلَمَّا کَلَّمَہٗ قَالَ اِنَّکَ الۡیَوۡمَ لَدَیۡنَا
مَکِیۡنٌ اَمِیۡنٌ ﴿۵۴﴾ قَالَ اجۡعَلۡنِیۡ عَلٰی خَزَآئِنِ الۡاَرۡضِ ۚ اِنِّیۡ حَفِیۡظٌ
عَلِیۡمٌ ﴿۵۵﴾ وَکَذٰلِکَ مَکَّنَّا لِیُوۡسُفَ فِی الۡاَرۡضِ ۚ یَتَبَوَّاُ مِنۡہَا حَیۡثُ
یَشَآءُ ؕ نُصِیۡبُ بِرَحۡمَتِنَا مَنۡ نَّشَآءُ وَلَا نُضِیۡعُ اَجۡرَ الۡمُحۡسِنِیۡنَ ﴿۵۶﴾
وَلَاَجۡرُ الۡاٰخِرَۃِ خَیۡرٌ لِّلَّذِیۡنَ اٰمَنُوۡا وَکَانُوۡا یَتَّقُوۡنَ ﴿۵۷﴾ وَجَآءَ ع ۷/۸
اِخۡوَۃُ یُوۡسُفَ فَدَخَلُوۡا عَلَیۡہِ فَعَرَفَہُمۡ وَہُمۡ لَہٗ مُنۡکِرُوۡنَ ﴿۵۸﴾ وَ
لَمَّا جَہَّزَہُمۡ بِجَہَازِہِمۡ قَالَ ائۡتُوۡنِیۡ بِاَخٍ لَّکُمۡ مِّنۡ اَبِیۡکُمۡ ۚ اَلَا
تَرَوۡنَ اَنِّیۡۤ اُوۡفِی الۡکَیۡلَ وَاَنَا خَیۡرُ الۡمُنۡزِلِیۡنَ ﴿۵۹﴾ فَاِنۡ لَّمۡ تَاۡتُوۡنِیۡ
بِہٖ فَلَا کَیۡلَ لَکُمۡ عِنۡدِیۡ وَلَا تَقۡرَبُوۡنِ ﴿۶۰﴾ قَالُوۡا سَنُرَاوِدُ عَنۡہُ
اَبَاہُ وَاِنَّا لَفٰعِلُوۡنَ ﴿۶۱﴾ وَقَالَ لِفِتۡیٰنِہِ اجۡعَلُوۡا بِضَاعَتَہُمۡ فِیۡ
رِحَالِہِمۡ لَعَلَّہُمۡ یَعۡرِفُوۡنَہَاۤ اِذَا انۡقَلَبُوۡۤا اِلٰۤی اَہۡلِہِمۡ لَعَلَّہُمۡ
یَرۡجِعُوۡنَ ﴿۶۲﴾ فَلَمَّا رَجَعُوۡۤا اِلٰۤی اَبِیۡہِمۡ قَالُوۡا یٰۤاَبَانَا مُنِعَ مِنَّا
الۡکَیۡلُ فَاَرۡسِلۡ مَعَنَاۤ اَخَانَا نَکۡتَلۡ وَاِنَّا لَہٗ لَحٰفِظُوۡنَ ﴿۶۳﴾

53. "மேலும், நான் (யூஸுஃபின் மீது மோகங்கொள்ளவில்லை என்று கூறி) என் மனதை நான் தூய்மைப்படுத்தவில்லை;(ஏனென்றால்,) நிச்சயமாக என் இரட்சகன் அருள் புரிந்தவரையன்றி, (மனிதனுடைய) மனம் பாவம் செய்யும்படி அதிகம் தூண்டக்கூடியதாகவே இருக்கின்றது; நிச்சயமாக என் இரட்சகன் மிக்க மன்னிப்பவன்; மிகக் கிருபையுடையவன்" (என்று எகிப்திய அரசரின் அமைச்சருடைய மனைவி கூறினாள்)(16)

54. (சிறைச் சாலையிலிருக்கும் யூஸுஃபின் ஞானத்தை அறிந்த) அரசர்: "அவரை என்னிடம் (அழைத்துக்)கொண்டு வாருங்கள்; எனக்கு மட்டும் பிரத்தியேக மானவராக அவரை நான் அமர்த்திக் கொள்வேன்" என்று கூறினார்; (ஆகவே சிறையிலிருந்து வெளியாகிய) அவருடன் பேசிய பொழுது, நிச்சயமாக நீர் இன்றிலிருந்து நம்மிடம் பெரும் மதிப்பும், நம்பிக்கையும் பெற்றவராக இருக்கிறீர்" என்று கூறினார்.

55. அ(தற்க)வர், "இந்தப் பூமியின் களஞ்சியங்களின்மீது( நிர்வாகியாக )என்னை ஆக்கிவிடும்; நிச்சயமாக நான் (அவற்றைப்) பாதுகாக்கக் கூடியவன்; நன்கறிந்தவன்" என்று சொன்னார் (அரசரும் அவ்வாறே செய்தார்).

56. இவ்வாறே யூஸுஃபுக்கு பூமியில் அவர் விரும்பியவாறு வசித்துக்கொள்ள நாம் அவருக்கு வசதியளித்தோம்; நாம் விரும்பியவர்களுக்கு (இவ்வாறே) நம் அருளை கிடைக்கும்படிச்செய்கிறோம்; நன்மை செய்பவர்களின் கூலியை நாம் வீணாக்கிவிடவுமாட்டோம்.

57. மேலும், விசுவாசங்கொண்டு, பயபக்தியுடையவர்களாகவும் இருந்தார்களே அவர்களுக்கு மறுமையின் கூலியானது மிக மேலானதாக இருக்கும்.

58. மேலும், யூஸுஃபுடைய சகோதரர்கள் (கன்ஆனிலிருந்து) வந்து, அவரிடம் நுழைந்த பொழுது, அவர்களோ அவரை(யூஸுஃபை) அறியாதவர்களாக இருந்த நிலையில் அவர்களை (தன் சகோதரர்கள் என யூஸுஃபாகிய) அவர் அறிந்து கொண்டார்.

59. மேலும், (யூஸுஃபாகிய) அவர் அவர்களுக்கு (வேண்டிய) தானியங்களைச் தயார்ப்படுத்திக் கொடுத்தபோது, (மறுமுறை நீங்கள் வந்தால்) "உங்களுடைய தந்தையிலிருந்துள்ள உங்களுக்குரிய சகோதர(ன் புன்யாமீ)னையும் என்னிடம் (அழைத்துக்) கொண்டுவாருங்கள்; நான் நிச்சயமாக (உங்களுக்கு தானியங் களைப்) பூர்த்தியாக்குபவன் என்பதையும், விருந்துபசாரம் செய்பவர்களில் நான் மிகச் சிறந்தவன் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா?" என்று கூறினார்.

60. "ஆகவே, நீங்கள் அவரை என்னிடம் கொண்டு வராவிடில், என்னிடம் உங்களுக்கு (தானியத்தை) அளப்பது இல்லை, நீங்கள் என்னை நெருங்கவும் வேண்டாம்" (என்று கூறினார்).

61. அ(தற்க)வர்கள், "நாங்கள் அவருடைய தந்தையிடம் (உங்களிடம் அவரைக் கொண்டுவர) அவரைப் பற்றி (சாத்தியமான எல்லா) முயற்சிகளையும் மேற்கொள்வோம்; நிச்சயமாக நாங்கள் (அதைச்) செய்பவர்களாகவும் இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

62. (பின்னர் யூஸுஃப்) தன் பணியாட்களிடம், " (கிரயமாகக் கொடுத்த) அவர்களின் பொருளை அவர்களுடைய (பொதி) மூட்டைகளில்ஆக்கி (மறைத்து வைத்து)விடுங்கள்; அவர்கள் தங்கள் குடும்பத்தாரிடம் திரும்பிச் சென்றடைந்தால், (தானிய மூட்டைகளை அவிழ்க்கும்போது ) அதனை அவர்கள் அறிந்துகொண்டு, (அதனை நம்மிடம் செலுத்த) அவர்கள் திரும்பி வரக்கூடும்" என்று கூறினார்.

63. அவர்கள் தம் தந்தையிடம் திரும்பி வந்தபொழுது, "எங்கள் தந்தையே! எங்களுக்கு (த் தானியம்) அளப்பது தடுக்கப்பட்டு விட்டது; ஆதலால், எங்கள் சகோதரனையும் எங்களுடன் அனுப்பிவையுங்கள். நாங்கள் தானியம் அளந்து வாங்கிக்கொண்டு, நிச்சயமாக அவரையும் பாதுகாப்பவர்களாக இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

قَالَ هَلْ اٰمَنُكُمْ عَلَيْهِ اِلَّا كَمَآ اَمِنْتُكُمْ عَلٰٓى اَخِيْهِ مِنْ قَبْلُ ؕ
فَاللّٰهُ خَيْرٌ حٰفِظًا ۪ وَّهُوَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ ﴿٦٤﴾ وَلَمَّا فَتَحُوْا
مَتَاعَهُمْ وَجَدُوْا بِضَاعَتَهُمْ رُدَّتْ اِلَيْهِمْ ؕ قَالُوْا يٰۤاَبَانَا مَا
نَبْغِيْ ؕ هٰذِهٖ بِضَاعَتُنَا رُدَّتْ اِلَيْنَا ۚ وَنَمِيْرُ اَهْلَنَا وَنَحْفَظُ اَخَانَا
وَنَزْدَادُ كَيْلَ بَعِيْرٍ ؕ ذٰلِكَ كَيْلٌ يَّسِيْرٌ ﴿٦٥﴾ قَالَ لَنْ اُرْسِلَهٗ
مَعَكُمْ حَتّٰى تُؤْتُوْنِ مَوْثِقًا مِّنَ اللّٰهِ لَتَاْتُنَّنِيْ بِهٖۤ اِلَّاۤ اَنْ
يُّحَاطَ بِكُمْ ۚ فَلَمَّاۤ اٰتَوْهُ مَوْثِقَهُمْ قَالَ اللّٰهُ عَلٰى مَا نَقُوْلُ وَكِيْلٌ ﴿٦٦﴾
وَقَالَ يٰبَنِيَّ لَا تَدْخُلُوْا مِنْۢ بَابٍ وَّاحِدٍ وَّادْخُلُوْا مِنْ
اَبْوَابٍ مُّتَفَرِّقَةٍ ؕ وَمَاۤ اُغْنِيْ عَنْكُمْ مِّنَ اللّٰهِ مِنْ شَيْءٍ ؕ
اِنِ الْحُكْمُ اِلَّا لِلّٰهِ ؕ عَلَيْهِ تَوَكَّلْتُ ۚ وَعَلَيْهِ فَلْيَتَوَكَّلِ
الْمُتَوَكِّلُوْنَ ﴿٦٧﴾ وَلَمَّا دَخَلُوْا مِنْ حَيْثُ اَمَرَهُمْ اَبُوْهُمْ ؕ مَا
كَانَ يُغْنِيْ عَنْهُمْ مِّنَ اللّٰهِ مِنْ شَيْءٍ اِلَّا حَاجَةً فِيْ نَفْسِ
يَعْقُوْبَ قَضٰىهَا ؕ وَاِنَّهٗ لَذُوْ عِلْمٍ لِّمَا عَلَّمْنٰهُ وَلٰكِنَّ اَكْثَرَ
النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿٦٨﴾ وَلَمَّا دَخَلُوْا عَلٰى يُوْسُفَ اٰوٰۤى اِلَيْهِ ع ٨ ١١
اَخَاهُ قَالَ اِنِّيْۤ اَنَا اَخُوْكَ فَلَا تَبْتَىِٕسْ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿٦٩﴾

64. அதற்கு (யாஃகூபாகிய)அவர், "இதற்கு முன்னர் இவருடைய சகோதரர் (யூஸுஃப்) விஷயத்தில் நான் உங்களை நம்பி (மோசம்போ)னது போல் அல்லாது இவர் விஷயத்திலும் நான் உங்களை நம்புவேனா? (முடியாது) ஆகவே, பாதுகாப்பவனில் அல்லாஹ் மிக்க மேலானவன்; மேலும், அவனே அருள் புரிவோரிலெல்லாம்மிக்க அருளாளன்" என்று கூறிவிட்டார்.

65. இன்னும், அவர்கள் தங்கள் சாமான் (மூட்டை)களை அவிழ்த்தபொழுது, அவர்கள் (கிரயமாகக்)கொடுத்த பொருளை அவர்களிடமே திருப்பப் பட்டுவிட்டதைக் கண்டு, "எங்கள் தந்தையே! (இன்னும்,) நாங்கள் எதைத் தேடுவோம்? இதோ, நாம்(கிரயமாகக்)கொடுத்த பொருள் நம்மிடமே திருப்பப்பட்டுவிட்டது; (ஆகவே, புன்யாமீனையும் அழைத்துச் செல்ல அனுமதி தாருங்கள்.) நம் குடும்பத்திற்கு வேண்டிய தானியங்களையும் நாங்கள் வாங்கி வருவோம்; எங்கள் சகோதரனையும் பாதுகாத்து வருவோம்; (அவருக்காகவும்) ஓர் ஒட்டகச் சுமை தானியத்தை அதிகமாகவும் கொண்டு வருவோம். இ(வ்வாறு அவர்கள் அதிகமாகக் கொடுப்ப)து, எளிதான (தானிய) அளவைதான்" என்று கூறினார்கள்.

66. (அதற்கு)" உங்கள் யாவரையும் (ஏதேனும் ஆபத்து) சூழ்ந்துகொண்டாலன்றி, நிச்சயமாக அவரை என்னிடம் கொண்டு வருவீர்களென்று அல்லாஹ்வின் மீது நீங்கள் (யாவரும்) எனக்கு உறுதிமொழி கொடுக்கும்வரை, நான் அவரை உங்களுடன் அனுப்பவே மாட்டேன்," என்று (யாஃகூப் நபியாகிய)அவர் கூறினார்; ஆகவே அவர்கள் (அவ்வாறு) அவருக்கு உறுதிமொழி கொடுக்கவே, (அதற்கு) அவர் "நாம் பேசிக்கொண்டதற்கு அல்லாஹ்வே கண்காணிப்பவனாக இருக்கிறான்" என்று கூறினார்;

67. இன்னும் (அவர்களிடம்,) "என் (அருமை) மக்களே! (எகிப்தினுள்) ஒரே வாசலில் நுழையாதீர்கள்; வெவ்வேறு வாசல்களில் நுழையுங்கள்; அல்லாஹ்விலிருந்து (ஏற்படவிருக்கும்)எந்த ஒன்றை விட்டும் உங்களை நான் தடுத்து விடவும் முடியாது; (ஏனென்றால், சகல) அதிகாரம் அல்லாஹ்வுக்கேயன்றி (வேறெவருக்கும்) இல்லை; (உங்கள் யாவரையும் அவனிடமே ஒப்படைத்து முழுமையாக) அவன் மீது நம்பிக்கை வைத்துவிட்டேன்; ஆகவே, (முழுமையாக) நம்பிக்கை வைக்கிறவர்கள் (இவ்வாறே) அவன் மீதே (முழுமையாக) நம்பிக்கை வைக்கவும்" என்றார்.

68. மேலும், அவர்களின் தந்தை அவர்களுக்குக் கட்டளையிட்டவாறு அவர்கள் (எகிப்தில்) நுழைந்தபோது, யாஃகூபினுடைய மனதிலிருந்த ஒரு தேவையை_அதை அவர் நிறைவேற்றி விட்டார் என்பதைத் தவிர, அல்லாஹ்விடமிருந்து (ஏற்படயிருந்த) எந்த ஒன்றையும் அவர்களைவிட்டு அவர் தடுத்து விடுபவராக இருக்கவில்லை; மேலும், நாம் அவருக்குக் கற்றுக் கொடுத்தவற்றில் நிச்சயமாக அவர் அறிவுடையவராக இருந்தார்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (அதனை) அறியமாட்டார்கள்.

69. மேலும், யூஸுஃபிடம் அவர்கள் நுழைந்தபொழுது, அவர் தன் சகோதர(ன் புன்யாமீ)னைத் (தனியாக அழைத்து) தன்பால் ஒதுக்கிக் கொண்டு "நிச்சயமாக நான்தான் உம்முடைய சகோதரன் (யூஸுஃப்); ஆகவே, (எனக்கு இவர்கள்) செய்தவற்றைப் பற்றி நீர் கவலைப்படாதீர்" என்று (இரகசியமாகக்) கூறினார்.

فَلَمَّا جَهَّزَهُمْ بِجَهَازِهِمْ جَعَلَ السِّقَايَةَ فِيْ رَحْلِ
اَخِيْهِ ثُمَّ اَذَّنَ مُؤَذِّنٌ اَيَّتُهَا الْعِيْرُ اِنَّكُمْ لَسٰرِقُوْنَ ﴿۷۰﴾ قَالُوْا
وَاَقْبَلُوْا عَلَيْهِمْ مَّاذَا تَفْقِدُوْنَ ﴿۷۱﴾ قَالُوْا نَفْقِدُ صُوَاعَ
الْمَلِكِ وَلِمَنْ جَآءَ بِهٖ حِمْلُ بَعِيْرٍ وَّاَنَا بِهٖ زَعِيْمٌ ﴿۷۲﴾
قَالُوْا تَاللّٰهِ لَقَدْ عَلِمْتُمْ مَّا جِئْنَا لِنُفْسِدَ فِي الْاَرْضِ وَمَا
كُنَّا سٰرِقِيْنَ ﴿۷۳﴾ قَالُوْا فَمَا جَزَآؤُهٗۤ اِنْ كُنْتُمْ كٰذِبِيْنَ ﴿۷۴﴾ قَالُوْا
جَزَآؤُهٗ مَنْ وُّجِدَ فِيْ رَحْلِهٖ فَهُوَ جَزَآؤُهٗ ؕ كَذٰلِكَ نَجْزِي
الظّٰلِمِيْنَ ﴿۷۵﴾ فَبَدَاَ بِاَوْعِيَتِهِمْ قَبْلَ وِعَآءِ اَخِيْهِ ثُمَّ
اسْتَخْرَجَهَا مِنْ وِّعَآءِ اَخِيْهِ ؕ كَذٰلِكَ كِدْنَا لِيُوْسُفَ ؕ مَا
كَانَ لِيَاْخُذَ اَخَاهُ فِيْ دِيْنِ الْمَلِكِ اِلَّاۤ اَنْ يَّشَآءَ اللّٰهُ ؕ نَرْفَعُ
دَرَجٰتٍ مَّنْ نَّشَآءُ ؕ وَفَوْقَ كُلِّ ذِيْ عِلْمٍ عَلِيْمٌ ﴿۷۶﴾ قَالُوْۤا اِنْ
يَّسْرِقْ فَقَدْ سَرَقَ اَخٌ لَّهٗ مِنْ قَبْلُ ۚ فَاَسَرَّهَا يُوْسُفُ فِيْ
نَفْسِهٖ وَلَمْ يُبْدِهَا لَهُمْ ۚ قَالَ اَنْتُمْ شَرٌّ مَّكَانًا ۚ وَاللّٰهُ اَعْلَمُ
بِمَا تَصِفُوْنَ ﴿۷۷﴾ قَالُوْا يٰۤاَيُّهَا الْعَزِيْزُ اِنَّ لَهٗۤ اَبًا شَيْخًا
كَبِيْرًا فَخُذْ اَحَدَنَا مَكَانَهٗ ۚ اِنَّا نَرٰىكَ مِنَ الْمُحْسِنِيْنَ ﴿۷۸﴾

70. பின்னர், அவர்களுக்கு வேண்டிய தானியங்களைத் தயார் செய்த பொழுது, தன்னுடைய சகோதர(ன் புன்யாமீ)னுடைய சுமையில் (ஒரு பொற்) குவளையை ஆக்கி விட்டார்; பின்னர், (அவர்கள் சிறிது தூரம் செல்லவே) "ஓ! ஒட்டகக் கூட்டத்தார்களே! நிச்சயமாக நீங்கள் திருடர்களே" என்று ஓர் அறிவிப்பாளர் அறிவித்தார்.

71. அ(தற்க)வர்கள், இவர்களை முன்னோக்கி வந்து " நீங்கள் எதை இழந்துவிட்டீர்கள்?" என்று கேட்டார்கள்.

72. அ(தற்க)வர்கள், "அரசருடைய (ஒரு பொற்) குவளையை நாங்கள் இழந்துவிட்டோம்; மேலும், அதனை எவர் (தேடிக்) கொண்டுவந்த போதிலும் அவருக்கு ஓர் ஒட்டகச் சுமை (தானியம் வெகுமதி)உண்டு; இதற்கு நானே பொறுப்பாளியாவேன்" என்று (அவர்களில் ஒருவன் ) கூறினான்.

73. அ(தற்க)வர்கள், "அல்லாஹ்வின்மீது சத்தியமாக, நாங்கள் (இப்) பூமியில் குழப்பம் செய்வதற்காக வரவில்லை என்பதைத் திட்டமாக நீங்களும் நன்கறிந்திருக்கிறீர்கள்; அன்றியும், நாங்கள் திருடர்களாக இருந்ததுமில்லை" என்று கூறினார்கள்.

74. அ(தற்க)வர்கள், "நீங்கள் (இதில்) பொய்யர்களாயிருந்தால், அதற்குரிய தண்டனை என்ன?" என்று கேட்டனர்.

75. "அதற்குரிய தண்டனையானது: எவனுடைய சுமையில் அது காணப்படுகிறதோ அப்போது அவனே அதற்குரிய தண்டனையாகும்; அநியாயக்காரர்களுக்கு இவ்வாறே நாங்கள் தண்டனை அளிப்போம்" என்று அவர்கள் கூறினார்கள்.

76. ஆகவே, தன் சகோதர(ன் புன்யாமீ)னின் பொதிக்கு முன்னதாக மற்றவர்களின் பொதிகளைச் சோதிக்க ஆரம்பித்தார். பின்னர், தன் சகோதரனின் பொதியிலிருந்து அதனை வெளிப்படுத்தினார்; யூஸுஃபுக்கு இவ்வுபாயத்தை நாம் ஏற்படுத்திக் கொடுத்தோம்; அல்லாஹ் நாடினாலன்றி, அவர் தன் சகோதரனை எடுத்துக்கொள்ள(எகிப்து) அரசரின் சட்டப்படி முடியாதிருந்தார்; நாம் நாடியவர்களின் பதவிகளை உயர்த்துகிறோம்; அறிவுடைய ஒவ்வொருவருக்கும் மேலாக (அவரைவிட) மிக அறிந்தவர் இருக்கிறார்.

77. (இவ்வாறு கண்ட யூஸுஃபின் மற்ற சகோதரரர்கள்,) "அவன் (அதனைத்) திருடியிருந்தால், அவனுடைய சகோதரன் (யூஸுஃபும்) இதற்கு முன் நிச்சயமாகத் திருடியே இருப்பான்" என்று, கூறிக் கொண்டனர்; யூஸுஃப் அவர்களுக்கு வெளியாக்காது, அவர் அதைத் தன்மனதுக்குள் மறைத்து வைத்துக்கொண்டு, "நீங்கள் இடத்தால் தீயவர்கள்; ( இவர் சகோதரரும் திருடியதாக) நீங்கள் வர்ணிக்கிறீர்களே அதனை அல்லாஹ் மிக்க அறிந்தவன் " என்று(மனதில்) கூறிக் கொண்டார்.

78. அ(தற்க)வர்கள்,(யூஸுஃபிடம், எகிப்திய அரசின்) "அமைச்சரே! நிச்சயமாக முதிர்ச்சியடைந்த வயோதிகரான தந்தை அவருக்கு இருக்கிறார். ஆகவே, அவருக்குப் பதிலாக எங்களில் ஒருவரை நீர் எடுத்துக்கொள்வீராக! நிச்சயமாக நாம் உம்மை உபகாரம் செய்பவர்களில் (ஒருவராகக்) காண்கிறோம்" என்று கூறினார்கள்.

قَالَ مَعَاذَ اللّٰهِ اَنْ نَّاْخُذَ اِلَّا مَنْ وَّجَدْنَا مَتَاعَنَا عِنْدَهٗۤ
اِنَّاۤ اِذًا لَّظٰلِمُوْنَ ﴿٧٩﴾ فَلَمَّا اسْتَيْـَٔسُوْا مِنْهُ خَلَصُوْا نَجِيًّا ؕ ع ٩
قَالَ كَبِيْرُهُمْ اَلَمْ تَعْلَمُوْۤا اَنَّ اَبَاكُمْ قَدْ اَخَذَ عَلَيْكُمْ
مَّوْثِقًا مِّنَ اللّٰهِ وَمِنْ قَبْلُ مَا فَرَّطْتُّمْ فِيْ يُوْسُفَ ۚ فَلَنْ
اَبْرَحَ الْاَرْضَ حَتّٰى يَاْذَنَ لِيْۤ اَبِيْۤ اَوْ يَحْكُمَ اللّٰهُ لِيْ ۚ وَهُوَ
خَيْرُ الْحٰكِمِيْنَ ﴿٨٠﴾ اِرْجِعُوْۤا اِلٰۤى اَبِيْكُمْ فَقُوْلُوْا يٰۤاَبَانَاۤ اِنَّ
ابْنَكَ سَرَقَ ۚ وَمَا شَهِدْنَاۤ اِلَّا بِمَا عَلِمْنَا وَمَا كُنَّا
لِلْغَيْبِ حٰفِظِيْنَ ﴿٨١﴾ وَسْـَٔلِ الْقَرْيَةَ الَّتِيْ كُنَّا فِيْهَا
وَالْعِيْرَ الَّتِيْۤ اَقْبَلْنَا فِيْهَا ؕ وَاِنَّا لَصٰدِقُوْنَ ﴿٨٢﴾ قَالَ بَلْ
سَوَّلَتْ لَكُمْ اَنْفُسُكُمْ اَمْرًا ؕ فَصَبْرٌ جَمِيْلٌ ؕ عَسَى اللّٰهُ اَنْ
يَّاْتِيَنِيْ بِهِمْ جَمِيْعًا ؕ اِنَّهٗ هُوَ الْعَلِيْمُ الْحَكِيْمُ ﴿٨٣﴾ وَتَوَلّٰى
عَنْهُمْ وَقَالَ يٰۤاَسَفٰى عَلٰى يُوْسُفَ وَابْيَضَّتْ عَيْنٰهُ مِنَ
الْحُزْنِ فَهُوَ كَظِيْمٌ ﴿٨٤﴾ قَالُوْا تَاللّٰهِ تَفْتَؤُا تَذْكُرُ يُوْسُفَ حَتّٰى
تَكُوْنَ حَرَضًا اَوْ تَكُوْنَ مِنَ الْهٰلِكِيْنَ ﴿٨٥﴾ قَالَ اِنَّمَاۤ اَشْكُوْا
بَثِّيْ وَحُزْنِيْۤ اِلَى اللّٰهِ وَاَعْلَمُ مِنَ اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿٨٦﴾

79. அ(தற்க)வர், "எம்முடைய பொருளை எவரிடம் நாங்கள் பெற்றுக் கொண்டோமோ அவரைத் தவிர, (மற்றெவரையும்) பிடித்துக் கொள்ளாது (எங்களை) அல்லாஹ் காப்பாற்றுவானாக! (மற்றெவரையும் பிடித்துக் கொண்டால்) அச்சமயத்தில் நிச்சயமாக நாம் அநியாயக்காரர்களாகிவிடுவோம்" என்று கூறிவிட்டார்.

80. அவரிடம் அவர்கள் நம்பிக்கை இழந்துவிடவே, அவர்கள் (தங்களுக்குள்) தனித்து ஆலோசனை செய்தார்கள்; அவர்களில் பெரியவர், (மற்றவர்களிடம்,) "உங்கள் தந்தை உங்களிடம் அல்லாஹ்வின் உறுதிமொழியை வாங்கியிருப்பதையும், இதற்கு முன்னர் நீங்கள் யூஸுஃப் விஷயத்தில் செய்த பெருங்குறையையும் நீங்கள் அறியவில்லையா? ஆகவே, என் தந்தை எனக்கு அனுமதியளிக்கும் வரையில், அல்லது அல்லாஹ் எனக்கு தீர்ப்பளிக்கும் வரையில் (நான் இருக்கும்) இப்பூமியிலிருந்து நான் அகலவேமாட்டேன்; தீர்ப்பளிப்போரில் அவன் தான் மிக்க மேலானவன்" என்று கூறினார்.

81. (மேலும், அவர்களிடம்) "நீங்கள் (யாவரும்) உங்கள் தந்தையிடம் திரும்பிச் சென்று: எங்கள் தந்தையே! உங்கள் மகன் (புன்யாமீன்) நிச்சயமாகத் திருடி விட்டான்; உண்மையாகவே நாங்கள் கண்டதையே அன்றி (வேறெதையும்) நாங்கள் கூறவில்லை; இன்னும், மறைவானவற்றின் பாதுகாவலர்களாகவும் நாங்கள் இருக்கவில்லை" என்று கூறுங்கள்.

82. "(எங்கள் கூற்றை நீங்கள் நம்பாவிட்டால்,) நாங்கள் தங்கியிருந்த அவ்வூராரையும், எங்களுடன் வந்த ஒட்டகைக் கூட்டத்தினரையும் நீங்கள் கேட்(ட்டறிந்து கொள்)ளுங்கள். நிச்சயமாக, நாங்கள் உண்மையாளர்களாவோம்" (என்று சொல்லுங்கள் என்று கூறியனுப்பினார்).

83. (ஊர் திரும்பியவர்கள் நடந்தவற்றைத் தங்கள் தந்தையிடம் கூறவே அதற்கவர், "நீங்கள் கூறுவது) சரியல்ல! உங்கள் மனங்கள் ஒரு(தவறான)விஷயத்தைச் செய்யும்படி உங்களைத் தூண்டிவிட்டன; ஆகவே, அழகான பொறுமையைக் கைக்கொள்வதே மிக்க நன்று; அல்லாஹ் அவர்கள் யாவரையும் என்னிடம் கொண்டுவந்து சேர்த்து வைக்கப் போதுமானவன்; நிச்சயமாக அவனே யாவற்றையும் அறிந்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்" என்று கூறினார்.

84. இன்னும் அவர்களை விட்டு அவர் விலகிச் சென்று, "யூஸுஃபைப் பற்றி ஏற்பட்டிருக்கும் என்னுடைய துக்கமே!" என்று அவர் (வருத்தப்பட்டுக்) கூறினார்; அவரது இரு கண்களும் துக்கத்தால் (அழுதழுது)வெளுத்துப்போயின; பின்னர், அவர் (தன் துக்கத்தையும்) விழுங்கி(அடக்கி)க் கொள்பவராக இருந்தார்.

85. (இதனைக் கண்ட அவருடைய மக்கள் தந்தையே,) "அல்லாஹ்வின் மீது சத்தியமாக (நீங்கள் யூஸுஃபை நினைத்து நினைத்து) இளைத்தவராக நீர் ஆகிவிடும் வரை அல்லது அழிந்துவிடுவோரில் நீர் ஆகி விடும் வரை யூஸுஃபை நினைத்துக் கொண்டேயிருப்பீர்" என்று(கடிந்து) கூறினார்கள்.

86. அ(தற்க)வர், "என்னுடைய துக்கத்தையும், கவலையையும் நான் முறையிடுவதெல்லாம் அல்லாஹ்விடமேதான்; நீங்கள் அறியாதவற்றையும் அல்லாஹ்வி(ன் புறத்தி)லிருந்து நான் மிக்க அறிந்திருக்கிறேன்" என்று கூறினார்.

يٰبَنِيَّ اذْهَبُوْا فَتَحَسَّسُوْا مِنْ يُّوْسُفَ وَاَخِيْهِ وَلَا تَايْـَٔسُوْا
مِنْ رَّوْحِ اللّٰهِ ؕ اِنَّهٗ لَا يَايْـَٔسُ مِنْ رَّوْحِ اللّٰهِ اِلَّا الْقَوْمُ
الْكٰفِرُوْنَ ﴿۸۷﴾ فَلَمَّا دَخَلُوْا عَلَيْهِ قَالُوْا يٰۤاَيُّهَا الْعَزِيْزُ مَسَّنَا
وَاَهْلَنَا الضُّرُّ وَجِئْنَا بِبِضَاعَةٍ مُّزْجٰىةٍ فَاَوْفِ لَنَا الْكَيْلَ
وَتَصَدَّقْ عَلَيْنَا ؕ اِنَّ اللّٰهَ يَجْزِى الْمُتَصَدِّقِيْنَ ﴿۸۸﴾ قَالَ
هَلْ عَلِمْتُمْ مَّا فَعَلْتُمْ بِيُوْسُفَ وَاَخِيْهِ اِذْ اَنْتُمْ جٰهِلُوْنَ ﴿۸۹﴾
قَالُوْۤا ءَاِنَّكَ لَاَنْتَ يُوْسُفُ ؕ قَالَ اَنَا يُوْسُفُ وَهٰذَاۤ اَخِيْ ز
قَدْ مَنَّ اللّٰهُ عَلَيْنَا ؕ اِنَّهٗ مَنْ يَّتَّقِ وَيَصْبِرْ فَاِنَّ اللّٰهَ
لَا يُضِيْعُ اَجْرَ الْمُحْسِنِيْنَ ﴿۹۰﴾ قَالُوْا تَاللّٰهِ لَقَدْ اٰثَرَكَ
اللّٰهُ عَلَيْنَا وَاِنْ كُنَّا لَخٰطِـِٕيْنَ ﴿۹۱﴾ قَالَ لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ
الْيَوْمَ ؕ يَغْفِرُ اللّٰهُ لَكُمْ ز وَهُوَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ ﴿۹۲﴾ اِذْهَبُوْا
بِقَمِيْصِيْ هٰذَا فَاَلْقُوْهُ عَلٰى وَجْهِ اَبِيْ يَاْتِ بَصِيْرًا ج
وَاْتُوْنِيْ بِاَهْلِكُمْ اَجْمَعِيْنَ ﴿۹۳﴾ ع وَلَمَّا فَصَلَتِ ع ۱۰
الْعِيْرُ قَالَ اَبُوْهُمْ اِنِّيْ لَاَجِدُ رِيْحَ يُوْسُفَ لَوْلَاۤ اَنْ
تُفَنِّدُوْنِ ﴿۹۴﴾ قَالُوْا تَاللّٰهِ اِنَّكَ لَفِيْ ضَلٰلِكَ الْقَدِيْمِ ﴿۹۵﴾ الربع

87. "என்னுடைய மக்களே! நீங்கள் செல்லுங்கள்; பின்னர், யூஸுஃபையும், அவரது சகோதரரையும் துருவித்தேடுங்கள்; அல்லாஹ்வின் அருளிலிருந்து நீங்கள் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள்! நிச்சயமாக (அல்லாஹ்வின் மீது நம்பிக்கையற்ற)நிராகரிப்போரைத் தவிர,(மற்றெவரும்) அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிட மாட்டார்கள் (என்றும் கூறினார்).

88. பிறகு, அவர்கள் (எகிப்துக்கு வந்து யூஸுஃபாகிய) அவர்பால் நுழைந்து அவரிடம் (எகிப்திய அரசின்) "அமைச்சரே! எங்களையும் எங்கள் குடும்பத்தினரையும் (பஞ்சத்தின்) கொடுமை பீடித்துக்கொண்டது; (எங்களிடமிருந்த) அற்பப் பொருளையே நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்; ஆகவே, (அதனைப் பெற்றுக்கொண்டு) எங்களுக்கு வேண்டிய (தானியத்) தைப் பூரணமாக அளந்து கொடுத்து(மேற் கொண்டும்) எங்களுக்குத் தானமாகவும் கொடுத்தருள்வீராக! நிச்சயமாக அல்லாஹ் தானம் செய்வோருக்கு நற்கூலி அளிப்பான்" என்று கூறினார்கள்.

89. (அச்சமயம் அவர்,) "நீங்கள் அறிவீனர்களாக இருந்தபோது, யூஸுஃபையும், அவருடைய சகோதரரையும் என்ன செய்தீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்று கேட்டார்.

90. அ(தற்க)வர்கள் (திடுக்கிட்டு) "நிச்சயமாக நீர்தான், யூஸுஃபா?" என்று கேட்டார்கள். அ(தற்க)வர், "நான்தான் யூஸுஃப்; இவர் என் சகோதரர்; திட்டமாக அல்லாஹ் எங்கள் மீது பேரருள் புரிந்திருக்கிறான்; (ஏனென்றால்,) அது நிச்சயமாக: எவர் பயபக்தியுடன் இருந்து (கஷ்டங்களையும் சகித்துப்) பொறுத்துக் கொள்கிறாரோ (அத்தகைய) நன்மை செய்தோரின் கூலியை நிச்சயமாக அல்லாஹ் வீணாக்கிவிட மாட்டான்" என்று கூறினார்.

91. அ(தற்க)வர்கள், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நாங்கள் (உமக்கு பெரும்) தவறிழைத்தவர்களாக இருப்பினும், நிச்சயமாக அல்லாஹ், எங்களைவிட (பெருங்கிருபை கொண்டு) உம்மை மேன்மையாக்கி வைத்திருக்கிறான்" என்று கூறினார்கள்.

92. அ(தற்க)வர், "இன்றையத்தினம் உங்கள்மீது யாதொரு நிந்தனையும் இல்லை; அல்லாஹ்(வும்) உங்கள் குற்றங்களை மன்னித்து விடுவானாக! அவனே கிருபையாளர்களிலெல்லாம் மகாக்கிருபையாளன்" என்று கூறினார்.

93. "நீங்கள் என்னுடைய இந்தச்சட்டையைக்கொண்டுபோய் என் தந்தை முகத்தின் மீது போடுங்கள்; (அதனால், உடனே) அவர் பார்வையுடையவராக (த்திரும்பி) வருவார்; பின்னர், நீங்கள் உங்கள் குடும்பத்திலுள்ள யாவரையும் அழைத்துக்கொண்டு என்னிடம் வாருங்கள்" என்று கூறி (அனுப்பி)னார்.

94. (அவர்களுடைய) ஒட்டகக்கூட்டம் (எகிப்திலிருந்து) பிரிந்த சமயமே, அவர்களின் தந்தை "(இதோ)யூஸுஃபுடைய வாடையை நிச்சயமாக நான் நுகர்கிறேன்; (முதுமையின் காரணமாக)அறிவு மங்கிப் பேசுவதாக என்னை நீங்கள் கூறாதிருக்க வேண்டுமே! என்றார்.

95. (இதனைச் செவியுற்ற அவருடைய ஏனைய மக்கள்) "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நிச்சயமாக நீர் உம்முடைய பழைய வழிகேட்டில்தான் இருக்கிறீர்" என்று கூறினார்கள்.

فَلَمَّآ اَنْ جَآءَ الْبَشِیْرُ اَلْقٰىهُ عَلٰى وَجْهِهٖ فَارْتَدَّ بَصِیْرًا ۚ

قَالَ اَلَمْ اَقُلْ لَّكُمْ ۚ اِنِّیْۤ اَعْلَمُ مِنَ اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۹۶﴾

قَالُوْا یٰۤاَبَانَا اسْتَغْفِرْ لَنَا ذُنُوْبَنَاۤ اِنَّا كُنَّا خٰطِـِٕیْنَ ﴿۹۷﴾

قَالَ سَوْفَ اَسْتَغْفِرُ لَكُمْ رَبِّیْ ؕ اِنَّهٗ هُوَ الْغَفُوْرُ الرَّحِیْمُ ﴿۹۸﴾

فَلَمَّا دَخَلُوْا عَلٰى یُوْسُفَ اٰوٰۤى اِلَیْهِ اَبَوَیْهِ وَ قَالَ ادْخُلُوْا

مِصْرَ اِنْ شَآءَ اللّٰهُ اٰمِنِیْنَ ﴿۹۹﴾ ؕ وَ رَفَعَ اَبَوَیْهِ عَلَى الْعَرْشِ

وَ خَرُّوْا لَهٗ سُجَّدًا ۚ وَ قَالَ یٰۤاَبَتِ هٰذَا تَاْوِیْلُ رُءْیَایَ مِنْ

قَبْلُ ؗ قَدْ جَعَلَهَا رَبِّیْ حَقًّا ؕ وَ قَدْ اَحْسَنَ بِیْۤ اِذْ اَخْرَجَنِیْ

مِنَ السِّجْنِ وَ جَآءَ بِكُمْ مِّنَ الْبَدْوِ مِنْۢ بَعْدِ اَنْ نَّزَغَ

الشَّیْطٰنُ بَیْنِیْ وَ بَیْنَ اِخْوَتِیْ ؕ اِنَّ رَبِّیْ لَطِیْفٌ لِّمَا یَشَآءُ ؕ

اِنَّهٗ هُوَ الْعَلِیْمُ الْحَكِیْمُ ﴿۱۰۰﴾ رَبِّ قَدْ اٰتَیْتَنِیْ مِنَ الْمُلْكِ وَ

عَلَّمْتَنِیْ مِنْ تَاْوِیْلِ الْاَحَادِیْثِ ۚ فَاطِرَ السَّمٰوٰتِ وَ الْاَرْضِ ۫

اَنْتَ وَلِیّٖ فِی الدُّنْیَا وَ الْاٰخِرَةِ ۚ تَوَفَّنِیْ مُسْلِمًا وَّ اَلْحِقْنِیْ

بِالصّٰلِحِیْنَ ﴿۱۰۱﴾ ذٰلِكَ مِنْ اَنْۢبَآءِ الْغَیْبِ نُوْحِیْهِ اِلَیْكَ ۚ

وَ مَا كُنْتَ لَدَیْهِمْ اِذْ اَجْمَعُوْۤا اَمْرَهُمْ وَ هُمْ یَمْكُرُوْنَ ﴿۱۰۲﴾

96. அப்போது (யூஸுஃபைப்பற்றி) நன்மாராயங் கூறுபவர் வந்து, (யூஸுஃபுடைய சட்டையாகிய) அதனை அவர் (தந்தையின்) முகத்தின் மீது போடவே, அவர் (இழந்த தன்) பார்வையை அடைந்து, "யூஸுஃப் உயிரோடிருப்பதைப் பற்றி) நீங்கள் அறியாதவற்றையெல்லாம் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நிச்சயமாக நான் அறிவேன் என்பதாக (முன்னர்) நான் உங்களுக்குக் கூறவில்லையா?" என்று கேட்டார்.

97. "எங்கள் தந்தையே! எங்கள் பாவங்களை மன்னிக்குமாறு நீங்கள் எங்களுக்காக மன்னிப்புத் தேடுவீர்களாக! நிச்சயமாகவே நாங்கள் குற்றவாளிகளாகவே இருக்கிறோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

98. அ(தற்க)வர், "நான் என் இரட்சகனிடம் அடுத்து உங்களுக்காக மன்னிப்பைக் கோருவேன்; நிச்சயமாக அவனே மிக மன்னிப்போன், மிகக் கிருபையுடையோன்" என்று கூறினார்.

99. (பின்னர், குடும்பத்துடன் கன்ஆனிலிருந்த) அவர்கள் யூஸுஃபிடம் (எகிப்துக்கு) வந்து நுழைந்தபொழுது, அவர் தன் தாய் தந்தையை (மிக்க மரியாதையுடன் வரவேற்று) தன் பக்கம் சேர்த்துக் கொண்டு, "அல்லாஹ் நாடினால் நீங்கள் அச்சமற்றவர்களாக எகிப்தில் நுழையுங்கள்" என்றும் கூறினார்.

100. இன்னும், அவர் தன் பெற்றோரை சிம்மாசனத்தின் மீது உயர்த்தி (கண்ணியமாக அமரச்செய்யலா)னார். (எகிப்தின் அதிபதியாக இருந்த) அவருக்கு (அக்காலத்திய முறைப்படி) அவர்கள் அனைவரும் சிரம்பணிந்தவர்களாகவும் விழுந்தார்கள்; அச்சமயம் யூஸுஃப் (தன் தந்தையிடம்,) "என் தந்தையே! முன்னர் நான் கண்ட கனவின் விளக்கம் இதுதான்; என் இரட்சகன் அதனைத் திட்டமாக உண்மையாக்கிவிட்டான்; (எவருடைய சிபாரிசுமின்றியே) சிறைக்கூடத்திலிருந்து என்னை (அல்லாஹ்வாகிய) அவன் வெளியேற்றியபோது (அல்லாஹ்) எனக்குத்திட்டமாக பேருபகாரம் புரிந்துவிட்டான்; எனக்கும், என் சகோதரர்களுக்குமிடையில் ஷைத்தான் பிரிவினையை உண்டுபண்ணிய பின்னரும், உங்கள் யாவரையும் கிராமப்புறத்திலிருந்து என்னிடம் கொண்டு வந்துள்ளான்; நிச்சயமாக என் இரட்சகன், தான் நாடியதை மிக நுட்பமாகச் செய்கின்றவன்; நிச்சயமாக அவனே (யாவற்றையும்) நன்கறிந்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்" என்றார்.

101. (அன்றி) "என் இரட்சகனே! நிச்சயமாக நீ எனக்கு ஓர் ஆட்சியையும் தந்(தருள் புரிந்)து, கனவுகளின் விளக்கங்களையும் எனக்குக் கற்பித்தாய்; வானங்களை மற்றும் பூமியைப்படைத்தவனே! இம்மையிலும், மறுமையிலும் நீயே என் பாதுகாவலன்; முற்றிலும் (உனக்கு) கீழ்ப்படிந்த(முஸ்லிமான)வனாகவே என்னை நீ கைப்பற்றிக் கொள்வாயாக! நல்லோர்களுடன் என்னையும் சேர்த்தருள்வாயாக" (என்று பிரார்த்தித்தார்).

102. (நபியே!) இது (நீர் அறியாத) மறைவான செய்திகளில் உள்ளதாகும்; இதை உமக்கு நாம் (வஹீ மூலமே) அறிவிக்கிறோம்; இன்னும், அவர்கள் சூழ்ச்சி செய்கிறவர்களாக, (யூஸுஃபைக் கிணற்றில் தள்ள வேண்டுமென்று) தங்கள் காரியத்தில் அவர்கள் முடிவெடுக்க ஒருமித்த போது நீர் அவர்களிடத்தில் இருக்கவுமில்லை.

وَمَآ اَكْثَرُ النَّاسِ وَلَوْ حَرَصْتَ بِمُؤْمِنِيْنَ ﴿۱۰۳﴾ وَمَا تَسْـَٔلُهُمْ عَلَيْهِ
مِنْ اَجْرٍ ۭ اِنْ هُوَ اِلَّا ذِكْرٌ لِّلْعٰلَمِيْنَ ﴿۱۰۴﴾ ع وَكَاَيِّنْ مِّنْ اٰيَةٍ فِى ع ۱۱ ۵
السَّمٰوٰتِ وَالْاَرْضِ يَمُرُّوْنَ عَلَيْهَا وَهُمْ عَنْهَا مُعْرِضُوْنَ ﴿۱۰۵﴾
وَمَا يُؤْمِنُ اَكْثَرُهُمْ بِاللّٰهِ اِلَّا وَهُمْ مُّشْرِكُوْنَ ﴿۱۰۶﴾ اَفَاَمِنُوْٓا اَنْ
تَاْتِيَهُمْ غَاشِيَةٌ مِّنْ عَذَابِ اللّٰهِ اَوْ تَاْتِيَهُمُ السَّاعَةُ بَغْتَةً وَّ
هُمْ لَا يَشْعُرُوْنَ ﴿۱۰۷﴾ قُلْ هٰذِهٖ سَبِيْلِىْٓ اَدْعُوْٓا اِلَى اللّٰهِ ۣ عَلٰى
بَصِيْرَةٍ اَنَا وَمَنِ اتَّبَعَنِىْ ۭ وَسُبْحٰنَ اللّٰهِ وَمَآ اَنَا مِنَ الْمُشْرِكِيْنَ ﴿۱۰۸﴾
وَمَآ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ اِلَّا رِجَالًا نُّوْحِىْٓ اِلَيْهِمْ مِّنْ اَهْلِ الْقُرٰى ۭ
اَفَلَمْ يَسِيْرُوْا فِى الْاَرْضِ فَيَنْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الَّذِيْنَ
مِنْ قَبْلِهِمْ ۭ وَلَدَارُ الْاٰخِرَةِ خَيْرٌ لِّلَّذِيْنَ اتَّقَوْا ۭ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿۱۰۹﴾
حَتّٰٓى اِذَا اسْتَيْـَٔسَ الرُّسُلُ وَظَنُّوْٓا اَنَّهُمْ قَدْ كُذِبُوْا جَاۗءَهُمْ
نَصْرُنَا ۙ فَنُجِّىَ مَنْ نَّشَاۗءُ ۭ وَلَا يُرَدُّ بَاْسُنَا عَنِ الْقَوْمِ الْمُجْرِمِيْنَ ﴿۱۱۰﴾
لَقَدْ كَانَ فِىْ قَصَصِهِمْ عِبْرَةٌ لِّاُولِى الْاَلْبَابِ ۭ مَا كَانَ
حَدِيْثًا يُّفْتَرٰى وَلٰكِنْ تَصْدِيْقَ الَّذِىْ بَيْنَ يَدَيْهِ وَ
تَفْصِيْلَ كُلِّ شَىْءٍ وَّهُدًى وَّرَحْمَةً لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿۱۱۱﴾ ع ع ۱۲ ۶

103. நீர் (எவ்வளவுதான்) பேராவல் கொண்டாலும் (அம்) மனிதர்களில் பெரும்பாலோர் (அல்லாஹ்வை) விசுவாசங் கொள்பவர்களாக இல்லை.

104. இதற்காக நீர் அவர்களிடத்தில் யாதொரு கூலியையும் கேட்பதில்லை; அகிலத்தார்க்கும் இது ஒரு நல்லுபதேசமே தவிர (வேறு) இல்லை.

105. இன்னும், வானங்களில், மற்றும் பூமியில் எத்தனையோ அத்தாட்சிகள் இருக்கின்றன; (ஆனால்) அவற்றை(ச் சிந்திக்காது) புறக்கணித்தவர்களாகவே அவற்றின் பக்கம் அவர்கள் (அனுதினமும்) செல்கின்றனர்.

106. மேலும், அவர்களில் பெரும்பாலோர்_ அவர்கள் இணைவைக்கிறவர்களாகவே தவிர அல்லாஹ்வை விசுவாசிப்பதில்லை.

107. (அவர்களைச்) சூழ்ந்து கொள்ளக்கூடிய அல்லாஹ்வின் வேதனை அவர்களிடம் வந்து விடுவதைப் பற்றியும், அல்லது அவர்கள் அறியாத நிலைமையில் திடுகூறாய் (அவர்களுடைய முடிவு காலமான) மறுமை அவர்களுக்கு வந்து விடுவதைப்பற்றியும் அவர்கள் அச்சமற்றிருக்கின்றனரா?

108. (நபியே!) நீர் கூறுவீராக: இதுவே எனது (நேரான) வழியாகும்; நான் (உங்களை) அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன்; தெளிவான ஆதாரத்தின்மீதே நானும், என்னைப் பின்பற்றியவர்களும் இருக்கிறோம்; அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன்; நான் (அவனுக்கு) இணைவைப்போரில் உள்ளவனுமல்லன்.

109. உமக்கு முன்னர் ஊர்வாசிகளிலுள்ள (மனித இனத்தவர்களில்) ஆடவர்களை அல்லாமல் (மலக்குகளை)நாம் (தூதர்களாக) அனுப்பவில்லை; அவர்களுக்கு (நம்முடைய கட்டளைகளை) வஹீ மூலம் அறிவிக்கின்றோம்; அவர்கள் பூமியில் பிரயாணம் செய்யவில்லையா? (அவ்வாறு பிரயாணம் செய்தால்) அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி ஆயிற்று என்பதை அவர்கள் கண்டுகொள்வார்கள்; மறுமையின் வீடோ பயபக்தியுடையோர்களுக்கு மிக்க மேலானது; நீங்கள் விளங்கிக் கொள்ளமாட்டீர்களா?

110. (நபியே! எந்த சமூகத்தார் மீதும் தண்டனையை நாம் துரிதப்படுத்தவில்லை). எதுவரையெனில், (தம் சமூகத்தவர்கள் விசுவாசம் கொள்ளவே மாட்டார்கள் என அத்)தூதர்கள் நிராசை அடைந்து, நிச்சயமாக நாம் (அவர்களால்) பொய்ப்படுத்தப்பட்டுவிட்டோம் என அவர்கள் உறுதி கொண்டுவிட்டனர். (அப்போது) அவர்களுக்கு நம்முடைய உதவி வந்தது; (பின்னர்) நாம் நாடியவர்கள் காப்பாற்றப்பட்டனர்; குற்றவாளிகளான சமூகத்தாரை விட்டும் நம் தண்டனை நீக்கப்படவு மாட்டாது.

111. அறிவுடையோருக்கு, (நபிமார்களாகிய) இவர்களுடைய வரலாற்றில் நல்லதொரு படிப்பினை திட்டமாக இருக்கிறது; (இந்தக் குர்ஆன்) பொய்யாகக் கற்பனை செய்யப்படுகின்ற செய்தியாக இருந்ததில்லை; ஆயினும், இதற்கு முன் உள்ள(வேதத்)தை உண்மையாக்கி வைத்து, ஒவ்வொரு விஷயத்தையும் விவரித்துக்கூறுவதாகவும் இருக்கிறது; அன்றியும், விசுவாசங் கொண்டோருக்கு நேர் வழியாகவும், அருளாகவும் இருக்கிறது.